ரூ. 8.00

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்



3-2-2016 அன்று திருநெல்வேலி
மாவட்டம் விஜயஅச்சம்பாட்டில்
குருமகாசந்நிதானம் அவர்களால்
திறந்து வைக்கப்பட்ட
நமது பள்ளிக்கட்டிடம்



திருவள்ளுவர் ஆண்டு 2047 மாசி - பங்குனி
பிப்ரவரி-ஏப்ரல் 2016

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்



5-3-2016 அன்று தஞ்சை உலகத்திருக்குறள் பேரவை 42வது ஆண்டு விழாவில் குறள்நெறிச்செம்மல் விருது பெற்ற தருமபுரம் ஆதீனம் டாக்டர் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் க. பாஸ்கரன் ஓய்வு பெற்ற காவல்துறை கண்காணிப்பாளர் கலியமூர்த்தி இ.கா.ப. அவர்கள்

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2047 மாதம் : மாசி - பங்குனி

மலர் : 31 இதழ் : 2 - 3

அன்பே வாழ்வு!

வாழ்க்கை என்பது இன்பங்களின் தொகுப்பு மட்டும் அல்ல! பிறரை மகிழ்வித்து மகிழ்வது, சின்னச் சின்ன உதவிகள் செய்தல், இனியச் சொற்கள் பேசுதல் இவை எல்லாம் நம் சூழலை மகிழ்வு உடையதாக ஆக்கும். இயற்கையின் வெப்பத்தைக் குறைக்கத் தெரிந்த நமக்கு இதயத்தின் வெப்பத்தைக் குறைக்க தெரிகின்றதா? இனிய சூழலை எப்படி உருவாக்குவது?

இதயத்தை நெகிழ வைக்கும் ஒரு சம்பவம். "உருகிய எண்ணங்கள்" என்ற ஆங்கில இதழில் வந்த ஒரு சம்பவத்தை திரு. இறையன்பு IAS தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

புகைவண்டியில் நண்பர் ஒருவர் பயணம் செய்து கொண்டிருந்தார். அடுத்த நிலையத்தில் 20 இராணுவவீரர்கள் இரயிலில் ஏறினர். அன்று அவர்களின் பயண நேரம் எட்டு மணி நேரம். ஒவ்வொரு நொடியிலும் ஆபத்தை எதிர்நோக்கிய வாழ்க்கைப் பயணம். இரண்டு மணி நேரம் கழித்து உணவுக்கு ஆர்டர் எடுப்பவர் ஒருவர் வந்தார்.

அவரிடம் "ஒரு சாப்பாடு எவ்வளவு?" என்று ஜவான் கேட்டார்.

"ஒரு சாப்பாடு ஐம்பது ரூபாய்" என்று அவர் சொன்னதும், ஜவான் தம் நீட்டிய கையை மடக்கிக் கொண்டார். அதைப் பார்த்த நண்பர் தம் பையிலிருந்து 1000 ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து அனைவருக்கும்

உணவு கொடுக்கும்படி உணவுக்கு ஆர்டர் எடுப்பவரிடம் சொன்னார்.

அவர்கள் அனைவரும் முதலில் மறுத்தனர். அவர்களை ஒத்துக் கொள்ள வைக்க பெரிய போராட்டமே நடத்த வேண்டி இருந்தது. பின்னர் ஒருவாறு ஒத்துக் கொண்டனர்.

அனைவரும் உணவு உண்டார்கள். நண்பர் இரயிலை விட்டு இறங்கும்பொழுது ஒருவர் "என் பங்காக இதை வைத்துக் கொள்ளுங்கள்" என்று 500 ரூபாய் கொடுத்தார். மற்றொருவர் 200 ரூபாய் கொடுத்தார். அப்படியே 2000 ரூபாய் சேர்ந்தது. அதையும் இராணுவ வீரர்களிடம் ஒப்படைத்து விட்டு மகிழ்வுடன் திரும்பினார். இந்தச் சம்பவம் எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

ஒரு நல்ல செயல் தொடர்ச்சியாக மகிழ்ச்சி அதிர்வுகளை ஏற்படுத்தும்.

இதைப் போலவே மற்றொரு சம்பவம். பள்ளி ஆசிரியை ஒருவர் பள்ளி ஆண்டு நிறைவு நாளில் மாணவர்கள் விடைபெறும் போது அவர்களுக்குப் பிரியாவிடை கொடுக்க முடிவு செய்தார். அவர்கள் ஒவ்வொருவரையும் அழைத்து அவர்கள் சட்டையில் "நீ என் வாழ்க்கையில் இனிமையை ஏற்படுத்தினாய்" என்ற வாசகத்தை மாலையைப் போல் அணிவித்தார். ஒவ்வொரு மாணவர் கையிலும் அதைப் போல மூன்று அட்டைகளை (பேட்ஜ்களை) கொடுத்து அனுப்பினார்.

தங்கள் ஆசிரியை இவ்வளவு தூரம் மதித்தார் என்பதை நினைக்கும் போது மாணவர்கள் மனதில் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது.

அவர்களில் ஒரு மாணவன் அந்தப் பேட்ஜ்களை எப்படி பயன்படுத்தலாம்? என்று தீவிரமாக யோசித்தான். அவனுடைய செயல்திட்ட (Project Work) பணிக்காக உதவிய தொழிற்சாலையின் இளநிலை அதிகாரிக்குத் தருவது என முடிவு செய்து, அவரிடம் ஓடிச் சென்று அவர்

சட்டையில் அணிவித்தபோது, அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி. மீதமிருந்த இரண்டு அட்டைகளை (பேட்ஜ்களை) அவரிடம் கொடுத்து விட்டுத் திரும்பி வந்தான்.

அந்த இளநிலை அதிகாரிக்குக் குழப்பம். இந்த இரண்டு பேட்ஜ்களை என்ன செய்வது? என்று யோசித்தபோது, எப்போது பார்த்தாலும் தன்னிடம் சிடுசிடுவென நடந்து கொண்டிருக்கும் மேலாளரிடம் சென்று அதை அணிவித்து விட்டு மீதமிருந்த ஒரு அட்டையை அவரிடம் கொடுத்து விட்டு வந்தார்.

மேலாளரும் மகிழ்ந்து. தன்னிடம் உள்ள பேட்ஜை யாருக்குக் கொடுப்பது? என்று வெகுநேரம் யோசித்தார். தான் அதிக நேரம் ஒதுக்காத தன் மகனுக்குக் கொடுத்து சமாதானம் செய்யலாம் என்று நினைத்தார்.

அன்று இரவு அவர் தொழிற்சாலையில் இருந்து வீட்டுக்குப் போக வெகுநேரமாகியும் மேல் மாடியில் மகனின் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது அவருக்கு ஆச்சரியத்தைத் தந்தது. அவர் வீட்டுக்குச் செல்வதற்கு முன் அவர் மகன் தூங்கி விடுவது வழக்கம். இன்று இவ்வளவு நேரம் விழித்துக் கொண்டிருக்கின்றானே என்று நினைத்து மகனின் பெயரைச் சொல்லி அழைத்தார்.

களைப்புடனும், சோகத்துடனும் அவன் கீழே வந்தான். அவனை அருகில் அழைத்தார்.

அவன் தயக்கத்துடன் வந்தான்.

"நீ என் வாழ்க்கையில் இனிமையை ஏற்படுத்தினாய்" என்கிற அந்தப் பேட்ஜை அவன் நெற்றியில் முத்தமிட்டவாறு அவனுடைய சட்டையில் அணிவித்தார்.

அதைப்பார்த்து அவன் ஓ.... வென்று அழுதான்.

அவன் கண்களில் கண்ணீர் தாரைதாரையாய் கொட்டியது. அவருக்கு ஒன்றும் புரியவில்லை. மகன் மகிழ்வான் என்று நினைத்தார். அழுகிறானே என்று அதிர்ச்சி அடைந்தார்.

சிறிது நேரம் கழித்து அவன் சொன்னான்.

"அப்பா நீங்கள் எனக்காக நேரம் ஒதுக்கவில்லை. உங்களுக்கு என்மீது அக்கறையே இல்லை என்றெல்லாம் இதுநாள் வரை நான் நினைத்திருந்தேன். உங்களுக்கு என்னை விட உங்கள் அலுவலகம் பெரிது. அதனால்தான் என்னுடன் மகிழ்ச்சியாகக் கழிப்பதில்லை என்று வருத்தப்பட்டேன். இனி நான் வாழ்ந்து என்ன பயன்? பேசாமல் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று துணிந்தேன். அது குறித்து இவ்வளவு நேரம் ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன். என்னுடைய எண்ணம் எவ்வளவு தவறானது என்று எனக்கு நீங்கள் உணர்த்திவிட்டீர்கள். இன்று மாத்திரம் நீங்கள் இந்தப் பேட்ஜைக் கொடுக்காமல் இருந்திருந்தால் உங்களைத் தப்பாகவே எண்ணி, இன்று இரவே தற்கொலை செய்து கொண்டிருப்பேன். நல்லவேளை கடவுள் என்னைக் காப்பாற்றி விட்டார். உங்கள் அன்பு எனக்குப் புரிந்தது." என்றுச் சொன்னான்.

மேலாளருக்குத் தன் தவறு புரிந்தது.

இத்தனை நாள் நான் அலுவலகம் அலுவலகம் என்று இருந்து மகனைக் கவனிக்கவில்லையே! அலுவலக இலக்குதான் பிரதானம் என்று கீழே பணிபுரியும் எல்லோரிடமும் கடுமையாக நடந்து கொண்டேன். இது எவ்வளவு பெரிய தவறு. அந்த இளநிலை அதிகாரியை நாம் சரியாக அன்பாக நடத்தியதில்லையே! ஆனால் அவர் தந்த இந்த அட்டையால்தானே நம் மகனைக் காப்பாற்ற முடிந்தது என்று மிகுந்த வருத்தப்பட்டார். அன்று இரவு முழுவதும் அவர் உறங்கவில்லை. அவர் மகனோ அவருடைய மடியில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். அலுவலகத்தில் எவ்வளவு பணி இருந்தாலும் இனி மகனுக்காக நேரம் ஒதுக்க வேண்டும் என்று உணர்ந்தார். பணியாளர்களிடமும் மென்மையாக நடப்பது என முடிவு செய்தார். அன்றிலிருந்து அவர் புதிய மனிதரானார்.

அந்த இளநிலை அதிகாரியும் அன்று தன்னிடம் உதவி கேட்டு வந்த மாணவனுக்கு நான் பெரிதாக உதவவில்லையே! வேண்டா வெறுப்பாகத்தானே வழிகாட்டினேன். ஆனால், அதையும்தாண்டி அந்த மாணவன் நம்மை நேசித்திருக்கிறானே! அடுத்த ஆண்டிலிருந்து நிறைய மாணவர்களுக்கு அன்புடன் அனைத்து விவரங்களையும் எடுத்துச்சொல்லி வழிகாட்ட வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டார்.

அந்த மாணவன் தூங்கவில்லை. நம் ஆசிரியை பாடம் நடத்தும்போது எத்தனை இடைஞ்சல்கள் செய்திருக்கிறோம். அவற்றை எல்லாம் தாண்டி அவர் நம்மீது கருணையோடு நடந்திருக்கிறாரே! அவருடைய அன்பிற்கு நான் பாத்திரமில்லையே! இனிமேல் எல்லா ஆசிரியர்களிடமும் பணிவுடனும், பண்புடனும் நடந்து கொள்ளவேண்டும் என்று அவன் உறுதி எடுத்துக் கொண்டான். அவன் மட்டுமல்ல. அத்தனை மாணவர்களும் அன்று அதையே சிந்தித்தார்கள்.

ஒரு சின்ன வாசகம் எவ்வளவு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதற்கு இந்தச் சம்பவம் சிறந்த எடுத்துக்காட்டு.

நம்மைச் சுற்றி இருப்பவர்களை முழுமனதோடு பணியில் ஈடுபடுத்துவது வெற்றியைப் பெற்றுத்தரும்.

ஹார்டுவாட் மேலாண்மைப் பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வுக் கண்டுபிடிப்பு கூறுகின்றது. மேலதிகாரி தன்னிடம் பணியாற்றுபவர்களிடம் உயர்ந்த எதிர்பார்ப்புகளை வைத்திருந்தால், அதை நிச்சயம் பணியாளர்கள் நிறைவேற்றிக் காட்டுவார்கள். ஒரு மாணவனிடம் நீ நூறு மதிப்பெண்களைப் பெறுவாய் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தினால் அந்த மாணவன் அந்த உந்து சக்தியால் உற்சாகத்தோடு செயல்பட்டு அந்த இலக்கை அடைவான். அதனால்தான் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள்மீது எதிர்மறையான எண்ணங்களை வைத்துக் கொள்ளக்கூடாது. அவர்கள் நினைத்தால் சாமானியர்களையும்

சரித்திரம் படைக்க வைக்க முடியும். இதற்கு பீக்மேலியர் தத்துவம் என்று அவர்கள் பெயர் வைத்து இருக்கிறார்கள்.

நம்பிக்கையைச் சிதைப்பவர்கள் மேலாண்மைப் பொறுப்பில் உள்ளவர்களாகச் செயல்படக்கூடாது. நம்பிக்கை தான் வானத்தையே எல்லையாக மாற்றுகின்றது. வானவில்லை வளைத்து வாழ்க்கையாக்குகின்றது. இருகைகளை இருபதாயிரம் கைகளின் வேகத்தில் பணியாற்ற வைக்கின்றது. வெற்றி என்பது விழாமல் இருப்பது மட்டுமல்ல. விழுந்தாலும் விழுந்த வேகத்தில் எழுந்து நிற்பதுதான்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை"

என்றார் திருவள்ளுவர்.

"முயற்சி திருவினை ஆக்கும்.
முயற்றின்மை இன்மைப் புகுத்தி விடும்"
வெற்றியின் வழி உழைப்பினில்!

உழைப்பினை இடையறாது செய்வோம். மண்ணகத்தை விண்ணகமாக்குவோம். அசைவில்லாத ஊக்கத்தோடு இடையறாது ஆக்கச் செயல்களில் ஈடுபட்டால் அவர்களைச் செல்வம் வந்தடையும்.

பிறர் மகிழ்ச்சி அடையுமாறு இனிய சொற்களைப் பேசுவோம்.

பிறரிடம் அன்பு, நேயம், பரிவு காட்டுவோம்!

அன்பு என்ற மந்திரச் சொல் ஆற்றுகின்ற சாதனை அளவிடற்கரியது. இனிய சொற்கள் பிறருக்கு நலம் பயக்கும். இனியச் செயல்கள் மகத்தான மாற்றத்தை உருவாக்கும். நாம் பணிபுரியும் இடத்தை, வாழும் இடத்தை மகத்தானச் சொர்க்கமாக மாற்றிவிடும்!

இனிய சொற்களைப் பேசுவோம். பிறர் நலம் பேணும் இனிய செயல்களைச் செய்வோம். மண்ணகத்தை விண்ணகமாக்குவோம்!

என்றும் வேண்டும் இன்பம் அன்பு

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

தொழும்பாய்ப் பணி செய்வோம்!

இறைவன் காலங்கடந்தவன்; கால தத்துவங்களைக் கடந்தவன்; காலாதீதன், காலகாலன். அங்ஙனம் இருக்க இறைவனுக்குப் பழைமை ஏது? புதுமை ஏது? ஆம்! உண்மைதான்! ஆயினும் இறைவன், ஆன்மாக்களை ஆட்கொள்ள வினை முதல் காரணப் பொருளாக அறிமுகம் ஆகும் காலந்தொட்டு இறைவனுக்குக் காலக் கணக்கிடுதல் தவறன்று. கடவுளைப் பழையோன் என்று அழைத்தல் பழைய மரபு. பழைமை பழைமையினும் கால எல்லைக் கடந்த பழமை என்பதை - "முன்னைப் பழம் பொருள்" என்றார் மாணிக்கவாசகர். உலகியலில் காலப் பேரெல்லை ஊழி! பல்லூழிக் காலங் கண்டவனும் ஊழி முதல்வனும் ஊழிப் பெருங்கூத்து ஆடுபவனும் இறைவன் - கடவுள்! "இடுகாட்டு எரி ஆடலாய் அமர்ந்தவன்" என்ற வழக்கும் உண்டு. இடுகாடு என்பது கால தத்துவத்திற்குட்பட்ட மனிதரை எரிக்கும் சுடுகாடு அல்ல; இறைவன் ஆடலமர்ந்தருளும் இடுகாடு! ஊழிப் பெருங்காலம்! ஊழியொருவனின் கூத்து! கடையூழிக் காலம் என்றும் கூறுவர்.

கடையூழிக் காலம் என்று கூறினும் மாயா காரிய உலகினுக்கும் தேவர்களுக்குமே கடையூழி! இறைவன் கடையூழியைக் கடந்தவன். கடையூழியைச் சருவ சங்கார காலம் என்று புராணங்கள் கூறும். கடையூழியில் எல்லாம் அழிகின்றன. எல்லாம் கடந்த நிலையில் இறைவன் ஆடுதலை "ஈமத்தாடி" என்றும் கூறுவர். ஈமம், இடுகாடு என்பது இடம் பற்றிய குறிப்பு அல்ல. காலம் பற்றிய சிந்தனை. அந்தக் கடையூழிக் காலத்து இறைவன் இறைவியுடன் ஆடும்பொழுது எழும் தூசியே திருநீறு. திருஞானசம்பந்தர் "சுடலைப் பொடி பூசி" என்றார். இறைவன் கடையூழிக் காலத்தில் ஆடுவது - நுண்மை நிலையில் ஐந்தொழில் நிகழ்த்துவதற்காகவேயாம்! கடையூழி ஒடுக்கத்தில் ஆன்மாக்கள் இளைப்பாறிய நிலையில் மீண்டும் புத்துயிர்ப்புப் பெறுகின்றன; புதுப்பிறப்பு எடுக்கின்றன. ஆதலால் கடவுள் காலம் கடந்தவன்! ஏன்? ஞாலமும் விசும்பும் இவை வந்து போகும் காலமாகவே இருப்பவன்!

காலம் கடந்தது எல்லாம் பழைமை! காலங்கடந்து நின்றால் மட்டும் போதாது. காலத்தை வென்று விளங்க வேண்டும். ஆம்! காலத்தினால் ஆய நியதிகளைக் கடத்தல் வேண்டும்; பிறப்பை இறப்பைக் கடத்தல் வேண்டும். "பிறவாயாக்கைப் பெரியோன்" என்று இறைவனைச் சிலம்பு போற்றும்! "முன்னே முனைந்தான்" என்று தேவாரம் பரவும். "நீலமணி மிடற்றொருவன்" என்று புறநானூறு போற்றும்! "விண்ணோர் அமுதுண்டு சாவ ஒருவரும் உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்பவன்" என்று இளங்கோவடிகள் நெகிழ்ந்து போற்றுவார். பெருமான் அணிந்துள்ள எலும்பு மாலையில் உள்ள மண்டை ஓடுகள் கடையூழிக் கணக்கைக் காட்டுவன. அழிந்தவற்றின் கணக்கும் அதுவே! ஆதலால் கடவுள் - சிவபெருமான் பழம்பொருள். முன்னைப் பழைமைக்கும் பழைய பொருள். "முன்னை" என்ற சொல் கால எல்லையைக் கடந்தது என்பதைக் குறிப்பது.

அது சரி! கடவுள் - சிவபெருமான் பழம்பொருள்! பழையோன்! ஆன்மாக்களோ புதுப்புதுப் பிறவி எடுப்பன! அதனால், ஆன்மாக்களுக்கு - உயிர்களுக்குப் பழைமை பிடிக்குமா? ஆன்மாக்கள் - உயிர்கள் புதுமையை விரும்புவன. அது மட்டுமல்ல. ஆன்மாக்கள் புதுமையை விரும்பினாலே உலகம் இயங்கும்; வளரும்; வாழும். ஆதலால் ஆன்மாக்களை - உயிர்களை ஆட்கொள்ளும் விளையாட்டினைக் கருதி இறைவன் புதுமையாகவும் விளங்குகிறான். காலத்தினால் விளையும் மூப்பு, முதுமை, கிழட்டுத் தனம் இல்லாமல் என்றும் இளையோனாக, கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பாக விளங்கி அருள்கின்றான்.

காலம் மிகமிகக் கொடுமையானது; கண்டிப்பானது. காலத்தொடு பட்டவையெல்லாம் மூப்படையும்; கிழட்டுத் தன்மையடையும்; பயனற்றுப் போகும். காலப்போக்கில் "அழியும்." காலத்தத்துவம் நிகழ்காலம் எதிர்காலம் என்பதை விட விரைந்து இறந்த காலமாதல்தான் இயல்பு. திருக்குறள்,

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

என்று கூறும். ஆனால், இறைவன் - சிவபெருமான் காலாதீதனாய் இருப்பதால் அவன் புதுமை தாங்கியவனாகப் புதுமைப் புனைவுடன் விளங்க முடிகிறது. ஆன்மாக்களின் - உயிர்களின் விருப்பம் புதுமை வேட்டல். ஆன்மாக்கள் - உயிர்கள் விரும்பும் புதுமை, புத்தொளி கிடைக்காது போனாலும் அவை எய்த்துக் களைத்துப்போகும். ஆதலால் ஆன்மாக்களின் - உயிர்களின் வளர்ச்சி கருதி, நலம் கருதி, இறைவன் -

சிவன் நாழிகைதோறும் புதுமைப் புனைவாளனாக விளங்குகிறான். ஊழிதோறும் இறைவனுடைய திருமேனிகள் மாறுகின்றன; பெயர்கள் மாறுகின்றன. ஏன்? அவன் நிகழ்த்தும் திருவிளையாடல்கள் கூட மாறுபடுகின்றன! எனவே, இறைவன் பழைமைக்குப் பழமையானவன்! ஆம்! அது உண்மை! ஆயினும் பின்னைப் புதுமைக்கும் பற்றுக் கோடாக விளங்கி அருளுகின்றான்! புதிய புதிய கணக்கில்லாத கோலங்காட்டித் திருவிளையாடல் நிகழ்த்துகின்றான்; ஆட்கொண்டருள் செய்கின்றான். இன்றையப் புதுமை மட்டுமல்ல. இனி எதிர் வருங்காலத்தும் புதுமையாகவும் இறைவன் – சிவன் விளங்குவான். இது உண்மை! எது நாளும் புதுமை நலம் பெறுகிறதோ அது அழிவற்றது; ஆக்கம் தருவது. இறைவன் – சிவன் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்புதுமையாகவே விளங்குகின்றான்.

கடவுள் நம்பிக்கை மனித குலத்தில் கால்கொண்டு கிடக்கிறது. ஆனால் கடவுள் இலக்கணங்களில் எண்ணற்ற வேறுபாடுகள்! நாம் – ஆன்மாக்கள் கடவுளைத் தேடுவது ஏன்? வழிபடுவது ஏன்? காணாதனவற்றைக் காணவேண்டும். கேளாதனவற்றைக் கேட்க வேண்டும் என்றும் மாறாத் துணையாக அடையவேண்டும். நரகொடு சொர்க்கம் நானிலம் புகினும் பிரியாத தலைவனாக இருத்தல் வேண்டும். பிழையெலாம் தவிரப் பணித்து ஆட்கொள்ள வேண்டும். என்றும் இன்பம் பெருகும் இயல்பினை வழங்கியருளுதல் வேண்டும். இத்தகு நலன்களைப் பெறுவதற்குப் பரம்பொருளைத் தலைவனாகப் பெறுதல் தகுதி மிகுதியும் உடையது. தலைவரைத் தேர்ந்தெடுத்தல் மிக்க சிக்கலான பணி! நாற்காலி ஆசை தேவர்களுக்கும் உண்டு! வேள்வியில் சொரியும் அவிப்பொருளை உரிமையில்லாத நிலையிலும் தேடித் தின்பவர்கள் தேவர்கள். இந்தத் தேவர்களுக்கு அம்மம்ம, எத்தனை எத்தனை ஆசாபாசங்கள்! தேவர்களுக்கு நெறியும் இல்லை! முறையும் இல்லை! அவரவர் மனம் கொண்டதே மாளிகை. அதனால் திருக்குறள் "தேவரனையர் கயவர்" என்று திட்டித் தீர்த்துவிடுகிறது. கயவர்கள் இலக்கணம் என்ன? அவர் அவர் நலத்திற்கு அவரவர் விருப்பத்திற்கேற்ப வாழ்வர். நிர்வாணமான சுயநலவாதிகள். இவர்கள் கொலையிற் கொடியர்.

இறைவன் – சிவன் அப்படியல்ல. இறைவன் – சிவபெருமான் தனக்கென ஒன்றும் வேண்டாதவன். குறியொன்றும் இல்லாத கூத்தன்! இறைவன் திருநீறு பூசி விளங்குவதுகூடத் தம்மை வழிபடும் அடியார்களின் வினை நீங்குவதற்குத்தான்! குழந்தைகளின் நோய்க்குத்

தாயே மருந்துண்பாள்; பத்தியம் பிடிப்பாள்! அதுபோல இறைவன் – சிவபெருமான் ஆன்மாக்களின் நலனுக்காகவே ஐந்தொழில் நிகழ்த்துபவன். ஆன்மாக்களின் கருத்தறிந்து முடிப்பவன்; வேண்ட முழுதும் தருபவன்; உய்வார்கள் உய்யும் வகையில் ஆட்கொண்டருளிச் செய்பவன்; பொன்னும் மெய்ப்பொருளும் தருபவன்; துய்ப்பனவெல்லாம் தருந்தருள்பவன்; உய்யும் நெறியில் உய்ப்பன தந்தருளித் தாயிற் சிறந்த தயாவுடன் தொடர்ந்து நின்று காத்தருள்பவன். அதனால் சிவனே தலைவன்; தனித்துணை! சிவபெருமானைத் தலைவனாகப் பெறுதல் தவத்தின் ஆக்கம்; பயன்! அதனால் அடியார்கள் சிவபிரானைப் பிரானாக – தலைவனாகப் பெறுவதைவிட ஆன்மாக்களுக்கு வேறு பேறு ஏது? அதனாலன்றோ "எங்கெழில் என் ஞாயிறு?" என்றும் பாடுகின்றனர். அப்பரடிகள், "இறுமாந்திருப்பதென்று கொலோ?" என்றே பாடுவார்.

சிவநெறியின் சிறப்பு, சிவபெருமானுக்குப் புகழ் சேர்ப்பது மட்டுமல்ல. சிவனடியார்களுக்குப் புகழ் சேர்ப்பதே இறைவன் – சிவபெருமானின் திருவுள்ளம்! சிவனடியார்களைச் சிவன் எனவே தெளிந்துணர்ந்து வழிபாடு செய்யுமாறு சாத்திர நூல்கள் அறிமுகப்படுத்துகின்றன. ஆதலால் சிவபிரானைத் தேடுவதற்குப் பதில் சிவனடியாரைத் தேடலாம். இது எளிதும் கூட.

தமிழ்நாட்டுப் பெண்கள் களவுவழிக் கற்புக்குச் செல்பவர்கள். ஆம்! "களவும் கற்றுமற" என்று ஒரு பழமொழி உண்டு. தலைவியைக் காதலித்த காதலன் களவில் கூடும் காலத்தை நீட்டித்துக்கொண்டே சென்றான். களவுக் காலம் கூடுதல் அலர் தோன்றுவதற்கு வாய்ப்பினை உண்டாக்கும் என்றுணர்ந்த தோழி, தலைமகளை நோக்கிக் களவை மறந்துவிடுக! திருமணம் செய்துகொண்டு கற்பியலைத் தொடங்குக என்றுணர்த்திய பழமொழி இது. பழந்தமிழகத்தில் காதல் திருமணமே நடைபெற்றது. சுந்தரர் வரலாறு இதற்குச் சான்று.

இன்று திருமணங்களில் வழக்கத்தில் இருக்கும் கொடுமையாகிய வரதட்சணை ஒழிய வேண்டுமானால் காதல் திருமணங்கள் நடைபெற வேண்டும். பழங்காலத்தில் மனிதப் பண்பாட்டு அடிப்படையிலான சமுதாய அமைப்பு இருந்தது. அதனால் குலம் பார்ப்பார்கள்; குணம் பார்ப்பார்கள்; சீலம் பற்றிச் சிந்தனை செய்வார்கள்! இன்றோ பணமதிப்பீட்டுச் சமுதாயம்! எங்கும் எதிலும் பணத்தின் ஆதிக்கம்! மாணிக்கவாசகரின் திருவெம்பாவைப் பாடல்களில் வரும் பெண்கள், மரபுவழி வந்தவர்கள். ஆதலால், அவர்கள் தங்களுக்கு வாழ்க்கைத் துணைவராக வருபவர்கள்

சிவனடியாளர்களாக இருக்கவேண்டும் என்று விரும்புகின்றனர். அதனால் சிவனடியாரை கணவராகக் கொண்டு அந்தக் கணவரின் தாள்களைப் பணிவோம் என்கின்றனர். ஆம்! தலைமகளைத் தாங்கும் தாள்கள் தலைமகனுடைய தாளாண்மைமிக்குடைய தாள்கள்தானே! இங்குத் தாள் பணிவோம் என்பது பெண்ணடிமைத் தனத்தின் விளைவல்ல. தாள் – தலைபோல விரும்பித் தொழுதல்.

அடுத்து, சிவனடியார்களுக்கே பாங்காவோம் என்கின்றனர். பாங்காதல் என்பது அயரா அன்புடன், பரிவுடன் பணிவிடை செய்தல் என்பதாகும். இத்தகு சிவனடியாரையே மணப்போம், கணவராக ஏற்போம் என்று கூறுகின்றனர். ஆம்! சிவனடியார்கள் – நாங்கள் மணக்கப் போகும் சிவனடியார்கள் உவப்பப் பணி செய்வோம்! தொண்டு செய்வோம்! தற்சார்பின்றிக் கணவன்மார்களின் நலனையே நலனாகக் கொண்டு வாழ்வோம் என்கின்றனர்.

இறைவா சிவபெருமானே! இந்தப்படி சிவனடியாரை மணக்க தொண்டு செய்து வாழ்ந்திடத் திருவுள்ளம் பற்றுக! சிவனடியார் தாள் பணிவோம்! இங்ஙனம் சிவடினயாருக்குப் பணிசெய்யும் வாய்ப்பை வழங்கியருள்க! இந்தப் பேறு கிடைக்கச் செய்தருள்க! சிவனடியார்களைக் கணவராகப் பெற்றுப் பணி செய்யும் வாய்ப்புக் கிடைப்பின் எங்களுக்கு ஒரு குறையும் இல்லை!

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே! நாங்கள் ஆரத் துய்த்து மகிழ்வதற்கேற்பப் பின்னைப் புதுமை நலன்களையுடையவனே! சிவனடியார் எம் கணவராதல் பெரும்பேறு! அவர்தம் குறிப்பறிந்து தொழும்பாய்ப் பணி செய்தால் யாதொரு குறையும் இல்லை என்றெல்லாம் போற்றுகின்றனர்.

இந்தப் பாடலின் கருத்து வாழ்வாக மலர்ந்தால் வீடுகள் சிறக்கும்! இல்லறம் வளரும்! சிவநெறி மலரும்! மழை பொழியும்! மண் வளம் கொழிக்கும்!

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்!
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்!
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எனம்பாவாய்!

திருக்குறளில் பாயிரவியல்

(திருக்குறள் புலவர் நாவை. சிவம்)

முன்னுரை :

உலகில் முதன்முதல் தோன்றி, திருந்தி, நாகரிகமும் அறிவும் வளர்ச்சியும் பெற்று ஓங்கி உயர்ந்திருக்கும் வண்ணமொழி நம் அன்னையாம் தமிழாகும். இனிமையும், இலக்கிய இலக்கணமும் போன்ற வளம் பல சான்ற உயிர்ப்பு மொழி - உயர்தனிச் செம்மொழி என்று எழுச்சிமிக்க ஆய்வறிஞர் பலரால் நிறுவப்பெற்றுள்ளது.

இம்மொழியின் மணிமுடிகளாக நின்று துலங்கும் நூல்கள் இரண்டு. 1 - ஒல்காப்பெரும்புகழ் தொல்காப்பியம், 2 - திசையெல்லாம் மருக்கொழுந்தாய் மணக்கும் திருக்குறள்.

தமிழர் முகவரியாகவும், அடையாளமுமாகத் திகழ்வது திருக்குறளே. "அகர முதல" எனத்தமிழ் நெடுங்கணக்கின் உயிர் எழுத்தில் தொடங்கி, "முயங்கப் பெறின்" என்று மெய் எழுத்தில் முடிவது ஒன்றே இதன் பெருமைக்குச் சான்றாகும்.

ஈண்டு, முப்பால் எனப்பெறும் திருக்குறளின் முதற்பாலாம் அறத்துப்பாலின் முகப்பில் நின்று நகைப்புற வரவேற்கும் பாயிர இயல் பற்றிய கருத்துகளைப் பாங்குறக் காண்போம்.

பாயிரப் பெயர்கள் :

முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்

ஒரு நூலைப் பயிலுமுன், நூற் சிறப்பு, பெருமை, வரலாறு தொகுப்பு, பகுப்பு இவற்றைச் சுருக்கமாக கருத்துக்கேற்பத் தருவது பாயிரமாகும். இது பல பெயர்களைத் தாங்கும் என நன்னூல் சூத்திரம் 1 நவிலும்.

பாயிர இலக்கணம் :

ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லின்றே — நன்.சூத் 54 என்றும்,
மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க்(கு) அணியும் போல் - நாடிமுன்

ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துளாயா வைத்தார் பெரிது — நன்.சூத் 54 என்றும்,

கூறும் நன்னூல் இலக்கணப்படி, ஒரு பெருந்திருக்கோவிலோ, ஒரு மாளிகையோ பேரெழிலாகக் கட்டப்பெற்றிருந்தாலும் அதன் முகப்பில் நுழைவுவாயில் ஒன்று அமைத்தலே மிகு சிறப்பாம். இதுபோலவே பாயிரமில்லாமல் படைக்கும் நூலும் நூலாகாது. எனவே திருவள்ளுவரும் திருக்குறள் அறத்துப்பால் முகப்பில் பாயிரவியல் படைத்துள்ளார். ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்துள் பாயிரம் பற்றிய குறிப்பில்லை. ஆயினும் பாயிரத்து இலக்கணம் பகருங்காலை நூல் நுதலிய பொருளைச் சுருக்கமாகச் சொல்லவேண்டும் என தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரை மேற்கோளாய் நவிலும்.

மேலும், பருப்பொருட்டாகிய பாயிரம் கேட்டார்க்கு, நுண்பொருட்டாகிய நூலினிது விளங்கும் என்றால், நூல் கேட்கின்றான் புறஉரை கேட்கில் கொழுச்சென்ற வழி துன்னூசி இனிது செல்லுமாறு போல, நூல் இனிது விளங்கும் என்றார்.

அப்பாயிரந்தான், தலையமைந்த யானைக்கு விளையமைந்த பாகன் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும் நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்றாய் இருத்தல், அதுகேளாக்கால் குன்று முட்டிய குருவிபோலவும், குறிச்சி புக்க மான்போலவும் மாணாக்கன் இடர்ப்படுவான் என்று அழகுபட பாயிர இலக்கணம் பகர்வார்.

திருக்குறள் காட்டும் இலக்கணம் :

பண்டைத் தமிழர்கள் அறவாழ்வு வாழ்ந்தவர்கள். இறை நம்பிக்கையில் ஊறியவர்கள். இறைவனை உண்மைப் பொருளாகவும், உறுதிப்பொருளாகவும், அறிவுப் பொருளாகவும், பேரின்பப் பொருளாகவும் கருதியவர்கள். காலவெள்ளத்தால் அழிந்தது போக புதைந்து போன மொகஞ்சதாரோ, அரப்பா நகர நாகரிகம் பற்றி ஆய்ந்த புதைபொருள் ஆய்வாளர்கள், தமிழர்கள் இறை உணர்வாளர்கள் எனக்கூறிய கூற்றே போதிய சான்றாகும்.

தமிழர்தம் தவப்பயனாய்த் தோன்றிய திருவள்ளுவர் தமிழரே. தமிழர்தம் கலை நாகரிகப் பண்பாட்டு வாழ்வியலை, ஒழுக்க மேம்பாட்டை நன்கு உணர்ந்த பேரறிஞர் ஆதலின் தாம் படைத்த திருக்குறளை மூன்றடுக்கு கொண்ட பல்கலைக்கழகமாக

அமைத்துள்ளார். தமிழர்தம் உறுதிப்பொருளான அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கை 1330 பாக்களுக்குள் முப்பிரிவாக அடக்கிக்காட்டுகிறார். அறத்துப்பால் எனும் அடித்தளத்தின் முகப்பில், நான்கு சிற்றறைகள் அமைத்தார். முதல் அறையின் பெயர் கடவுள் வாழ்த்து. இரண்டாம் அறையின் பெயர் வான்சிறப்பு. மூன்றாம் அறையின் பெயர் நீத்தார் பெருமை. நான்காம் அறையின் பெயர் அறன் வலியுறுத்தல். இவை நான்கும் கொண்ட தொகுப்பை பாயிரம் என்றே குறிப்பிடுகின்றார்.

திருக்குறள் பாயிரம் பாடியவர் திருவள்ளுவரா? இடைச்செருகலா? ஆய்வுலக வினாக்கள் :

பாயிரம் என்ற சொல் தொல்காப்பியத்திலோ, கழக இலக்கியங்களிலோ பயிலப்பெறவில்லை. நன்னூல் பாடிய பவணந்தியார் கூறும் பொதுப்பாயிர உறுப்புகள் ஐந்தும், சிறப்புப்பாயிரம் உறுப்புகள் பதினொன்றும் திருக்குறள் பாயிரத்தில் காணப்பெறவில்லை. கடவுள் வாழ்த்து, நூல் நுதலிய பொருள் ஆகிய இரண்டு தவிர பிற உறுப்புகள் இல்லை. எனவே பாயிர இலக்கணத்திற்கு இது பொருந்தாது என்றும்,

தன்னாசிரியன், தன்னொடு கற்றோன்

தன்மாணாக்கன் தகும்உரை காரன் என்று

இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே - என நன்னூல் சூத்திரம் 51 நவிலுவதால் திருவள்ளுவரே தாம்பாடிய நூலுக்கு தாமே பாயிரம் எழுதியிருக்க மாட்டார். வேறு எவரோதான் செய்திருக்க வேண்டும். இது ஒரு இடைச்செருகலே என்றும் ஆய்வுலகம் வினாக்களைத் தொடுத்தன.

முப்பாலே முதற்பெயர் :

திருவள்ளுவர் பெருமை கூறும் திருவள்ளுவமாலையில் 53 பேர் இடம் பெற்றுள்ளனர். இவர்களுள் 13 பேர் திருக்குறளை முப்பால் என்றே மொழிகின்றனர். .... வள்ளுவனார்.

பொய்யற்ற முப்பால் பொருளுரைத்தான் தென்செழுவைத்

தெய்வப் பரிப்பெருமாள் தேர்ந்து

- எனும் பரிப்பெருமாள் உரைச் சிறப்புப்பாயிரம் முப்பால் என்றே மொழிகிறது. இதுவே திருக்குறளின் முதற்பெயராய் இருந்திருக்கக்கூடும். கி.பி.10 ஆம் நூற்றாண்டிற்குப்பின் வந்த

"கல்லாடம்" என்ற நூலில்தான் திருக்குறள் என்ற சொல் பதிவு இடம் பெறுகிறது. வெண்பா யாப்பு அடிப்படையில் ஈரடிக் குறள் வெண்பாவில் அமைந்ததாலும், திரு என்ற அடைமொழி சேர்க்கப் பெற்றதாலும் திருக்குறள் என்ற சொல்லாட்சி வந்தது. இது பிற்கால வழக்காய் நடைமுறையில் நின்றதென்பர்.

திருவள்ளுவமாலை தந்த தெளிவு :

ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் - யோயொருத்தர்
வாய்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்கேட்க வீற்றிருக்க லாம்

- என்று நந்தத்தனார் என்னும் புலவர் பாடிய திருவள்ளுவமாலை பாடலில் "பாயிரத்தினோடு" எனவரும் சொல்லே, பாயிரத்தையும் நூலையும் பிரிக்கின்றது என்றும், பாயிரம் இல்லாமல் 1330 குறட்பாக்களையும் எப்படிப் பாட முடியும்? எனவே பாயிரப்பாடல் திருவள்ளுவரால் பாடப்பெறவில்லை என்றும் வினாவைத் தொடுத்தனர். 1330 பாக்களில் பாயிரம் 40 பாக்களைக் கழித்தால் 1290 பாக்களே இருக்கும். அப்படியானால் மீதிப்பாடல்கள் எங்கே? எனும் குழப்பம் உண்டாகும் அன்றோ?

நந்தத்தனார் பாடிய பாட்டில், பாயிரத்தினோடு ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும் பகர்ந்ததற்பின் என்று மாற்றிப் பொருள் கொண்டால் பாயிரத்தையும் சேர்த்தே 1330 பாக்களையும் திருவள்ளுவரே பாடினார் என்ற தெளிவு பிறக்கும். தாமே பாடியதால் பாயிரத்தைத் தற்சிறப்புப் பாயிரம் எனலாம் எனவும் அறிஞர் உலகம் அமைவுற்றது.

முறைமாறிய உரையாசான்மார் :

திருவள்ளுவர் காலம் கி.மு. 31 என்றே மறைமலையடிகளார் குழுவினர் வரையறை செய்துள்ளனர். திருக்குறள் பிறந்து ஆயிரம் ஆண்டுகள் கழித்தே.

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிதி பரிமே லழகர் - திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர்வள்ளுவர் நூற்கு
எல்லையுரை செய்தார் இவர்

- எனும் பழம்பாடலில் கண்ட பதின்மர் திருக்குறளுக்கு மரபுரை எழுதினர். இவர்களுள் காலத்தால் முந்திய மணக்குடவரும், காலத்தால் பிந்திய பரிமேலழகரும் சிறப்புரை கண்டனராயினும், பரிமேலழகரே பலவகை உத்திகளுடன் இலக்கிய இலக்கணக்

குறிப்புக்களுடன் எழுதினார். இவ்வுரையே தெறிப்புரையாகப் பேசப் பெறுகிறது. ஆயினும் இவரோ ஆரியக்கொள்கைகளைக் கலந்து தமிழர்தம் பெருமைக்கு மாசு கற்பித்துவிட்டார். திருக்குறளின் பால், அதிகாரப் பெயர்த்தலைப்பும், குறள் எண்கள், வைப்புமுறையும் மாற்றம் செய்து வைத்த முறையில் பெரும்பங்கு ஏற்றவர். பெருவழக்கிற்கு வந்துவிட்ட இம்முறையை இவருக்குப் பின்வந்த 300க்கு மேற்பட்டவர்கள் இவரடியொற்றியே உரை செய்துள்ளனர். ஆயினும் திருக்குறளில் முறைமாற்றம் செய்தவர்களில் காளிங்கர் (ப.உ), பரிதியார் (ப.உ), பரிமேலழகர் (ப.உ.), சுகாத்தியார் (1889), வ.உ.சி. (1935), திரு.வி.க. (1949) முனைவர்.மு. வரதராசனார் (1948), புலவர். குழந்தை (1949), இரா.ந.கல்யாணசுந்தரர் (1955), டாக்டர். தே. ஆண்டியப்பன் (1978), கு.ச.ஆனந்தன் (1986), கவிரத்தின நலங்கிள்ளி (1990), டாக்டர். ஜனகாசுந்தரம் (1995), டாக்டர். சாலமன் 'பாப்பையா (1999), கலைவித்தகர்.ஆரூர்தாஸ் (2006), இராஜகாந்தீபன் (2000), புலவர். குடந்தையான் (2001), அ.மா.சாமி (2003), முதலியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவர். (துரவு ; முனைவர் கு.மோகனராசு எழுதிய முறைமாறிய திருக்குறள் உரையாசிரியர்கள் என்னும் நூல்)

பாயிரத்தில் காட்டும் செய்திகள் :

தொடங்கும் செயல் இடையூறு நேராமல் நிகழ நம் முன்னோர்கள் மனம் மொழி மெய்களால் இறைவனை வணங்கி வந்துள்ளனர். திருக்குறளில் கடவுள் என்ற சொல்லோ, தமிழ் என்ற சொல்லோ இடம்பெறவில்லை. ஆயினும், எம்மதச் சார்புமின்றி பொதுச் சொல்லால் இறைவனை குறிப்பிட்டு வாழ்த்துவது திருவள்ளுவரின் மீமிசைப் போக்கு ஆகும்.

முதற்றே உலகு என நூல் தொடங்கும் முறை இவரது பரந்த உள்ளத்தை விரித்துக்காட்டும். இறைவனை இடையறாது மனதால் நினைப்பது வாழ்த்துதல் என்றும் வெளிப்படையாக சொல்லால் போற்றுவதும், உடலால் செயல்படுவதும், வணங்குதல் அல்லது தொழுதல் என்றும் அழைப்பார்கள். திருக்குறள் பாயிரத்தில் இறைவனை வாழ்த்தும் முதல் அதிகாரத்தலைப்பு கடவுள் வாழ்த்தாகும். ஆனால் பரிமேலழகருக்குப் பின் வந்த உரையாசிரியர்களில் கடவுள் வாழ்த்து என்னும் பெயரை

முதற்பொருள் வாழ்த்து		
என்று குறிப்பிடுகிறார்	-	சுகாத்தியர்.
இறைநலம்	-	புலவர்.குழந்தை
என்று குறிப்பிடுகிறார்		பாவலர் இறையரசன்

இறைவாழ்த்து		
என்று குறிப்பிடுகிறார்	-	பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார்
உலகின் தோற்றம்		
என்று குறிப்பிடுகிறார்	-	பாவேந்தர் பாரதிதாசன்
முதல் பகவன் வாழ்த்து		
என்று குறிப்பிடுகிறார்	-	மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர்
அறிவன் சிறப்பு		
என்று குறிப்பிடுகிறார்	-	நாவலர் இரா. நெடுஞ்செழியன்
உலகத்தின் மூலம்	-	சிந்தனைச் செம்மல்
என்று குறிப்பிடுகிறார்		கு.ச. ஆனந்தன்
ஆதிபகவன் வாழ்த்து		
என்று குறிப்பிடுகிறார்	-	முனைவர். வ.சுப. மாணிக்கம்
இறைவணக்கம்	-	முதுமுனைவர்
என்று குறிப்பிடுகிறார்		இரா. இளங்குமரனார் சிற்பி பாலசுப்பிரமணியம், ஆ.வெ. இராமசாமி, முனைவர்.அ. ஆறுமுகம் முனைவர். க. தமிழமல்லன் முனைவர். பா. வளனரசு ச. திருநாவுக்கரசு மாத்தளை சோமு
உயர்ந்தோர் சிறப்பு	-	புலவர். குடந்தையான்
என்று குறிப்பிடுகிறார்		
வழிபாடு	-	கலைஞர். மு. கருணாநிதி
என்று குறிப்பிடுகிறார்		
திருவடி வணக்கம்	-	டாக்டர்.சாலமன் பாப்பையா
என்று குறிப்பிடுகிறார்		
ஆதி இறைவணக்கம்	-	பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்
என்று குறிப்பிடுகிறார்		

மேற்கண்டோர் அனைவரும் அவரவர்தம் புலமை நோக்கிற்கும் வளமைப் போக்கிற்கும் ஏற்ப உரை செய்துள்ளனர்.

திருக்குறள் பாயிரத்தில் காணும் கடவுள் வாழ்த்து :

அறத்துப்பாலை "அறப்பால்" என்றும், பாயிரத்தை "முதலியல்" என்றும் வ.உ.சியார் கூறியது போன்றே "பகவன்" என்ற சொல்லை "பகலன்" என்றே தந்தை பெரியாரும் கூறுகின்றார். அ எனும் எழுத்து ஒலி வடிவிலும் வரி வடிவிலும் முதலாகி நிற்பது போல் உலகம் யாவினுக்கும் ஆதிபகவனே முதலாகி நிற்கிறான் என்கிறார் குறளார். இறைவனின் முகம் காட்டாமல் அடிசேர்தல் பற்றியே ஏழு குறள்களில் பொதுமையான இறைநிலையைக் காட்டுகிறார். கல்வி கற்றதன் பயன் இடைவிடாது இறைவனை நினைப்பது என்கிறார். அதனால் இருவினை துன்பம் விலகி, மனக்கவலை நீங்கி நீடூழி வாழலாம் என்று உரைத்து நல்வாழ்விற்கு திருவள்ளுவர் இறைவுணர்வை ஊட்டுகிறார்.

வான்சிறப்பு :

இறைவன் உருவமே மழை! கொடுக்கவும், கெடுக்கவும் செய்வது மழையே! உலக உயிர்கள் தழைக்கவும், உணவுக்கும் உணவு தரும் தாவர உருவாக்கத்திற்கும் உழவிற்கும், கடல்வளத்திற்கும் பூசனை விழாக்களுக்கும் உலக இயக்கம் யாவினுக்கும் அடிப்படை மழையே என வான்சிறப்பை வள்ளுவர் சிறப்பிக்கின்றார்.

நீத்தார் பெருமை :

இறந்தவர் எண்ணிக்கை அறிய முடியாதது போல பற்றற்றவர் பெருமை அறிய முடியாது; சிறந்த நூல்களால் மட்டுமே அறிய முடியும். ஐம்பொறிகளை அடக்கி ஆள்பவர் இந்திரனுக்குச் சான்று போலாவர். அவரே செயற்கரிய செயல் செய்ய முடிந்தவர். எல்லார்க்கும் அன்பு காட்டும் அந்தணரே அறவோராவார். பற்றற்றவர்தம் பாங்கறிந்து வாழக் கற்றுக்கொண்டால் பேரின்பம் எய்தலாம் என்பார் திருவள்ளுவர்.

அறன் வலியுறுத்தல் :

உலகம் இனிதாகவும், நெடிதாகவும் வாழ அறமே அடிப்படை. அறத்தின் இயல்பும், விருப்பமும் அறச்செயலின் பயனும் விரித்துரைக்கின்றார். மனக்குற்றம் விலக்கி முடிந்த வழியில் எல்லாச்சிறப்பும் தரும் அறச்செயலை ஆற்றினால் பொறாமை, பேராவல், சினம், தீயசொல் முதலியன தாமே விலகும். புகழ்தரும் அறச்செயல் வாழ்நாளுக்கு வழிகாட்டும் இன்பம் தரும் என அறத்தின் மேம்பாட்டை திருவள்ளுவர் உரைக்கின்றார்.

நிறைவுரை :

திருவள்ளுவர் காட்டும் பாயிரம் திருவள்ளுவரால் பாடப்பெற்றதே. அவர் பாடிய வாழ்வியல் உலக நலனுக்கும் அமைதிக்கும் வழிகாட்டும். இறை உணர்வு ஓங்கி, மழைபோல் பிறர்க்கு உதவி, அறிவால் ஐம்பொறிகளின் தீமை விலக்கி, மனக்குற்றம் நீங்கி முடிந்தவரையில் அறச்செயலைச் செய்வோம். இதுவே துன்பம் விலக்கி இன்பத்தைக் கூட்டுவிக்கும். நிறைவான மகிழ்வில் நீடுவாழும் வாழ்வுதரும் என்றெல்லாம் திருவள்ளுவர் தொகுத்தும், பகுத்தும் உரைக்கின்றார். எனவே திருக்குறள் நெறியில் பீடு நடையிடுவோமாக.

வள்ளுவனின் குறள்மீது விழியை நாட்டி
வடித்த இரண் டடிஎடுத்து மனத்துள் போட்டுத்
தெள்ளிதின்நற் பொருள்கண்டே உளம்பூ ரித்துச்
சித்திரித்துப் பார்க்குங்கால் வளரும் எண்ணம்.

- திரைப்படபெரும்பாவலர் கண்ணதாசன்

தென்றலை நுகரும் பூக்கள்

(கவிஞர். சுமைதாங்கி இராமமூர்த்தி)


தேனிடை உறங்கும் வண்டு
தென்றலில் உறங்கும் வாசம்
மானிடை உறங்கும் அச்சம்
மயிலிடை உறங்கும் சாயல்

வானிடை உறங்கும் மஞ்சு
வயலிடை உறங்கும் செந்நெல்
கானிடை உறங்கும் காக்கை
கண்ணிடை உறங்கும் பாவை

கானிடை யாற்றின் வேகம்
கண்டவர் போற்றும் காட்சி
தேனுடை மங்கைச் செவ்வாய்
தென்றலை நுகரும் பூக்கள்

திருமுறையில் மகாமகம்

(தருமையாதீனப் புலவர்.வித்துவான். தா. குருசாமி தேசிகர்)



இறைவன் அட்டமூர்த்தமாக இருப்பதைத் திருமுறைகள் விளக்கம் பலவாறாகச் சொல்லும். அவற்றுள் நீராக உள்ளதைப் பொதுவாகச் சொல்லி இருந்தாலும் சிறப்பாக நீர்த்தலமாக திருவானைக்காதலத்தை நம் முன்னோர் அடையாளங்காட்டுவர்.

"நீரின்ப வெள்ளத்து நீந்திக்
குளிக்கின்ற
நெஞ்சங் கொண்டீர்"

என்று மணிவாசகம் நீராடும் இன்பத்தை நினைவூட்டும். நீராடல் சிறப்பு முன்னை இலக்கியங்களிலும் காணலாம். எனினும் தாயுமானவர் ஒருவரே மூர்த்தி தலம் தீர்த்தம் என்று மூன்றின் சிறப்பை முன்வைப்பார். சிவனுக்குத் "தீர்த்தன்" என்று திருமுறை பெயர் சூட்டியுள்ளது. திருப்புத்தூர்த் தாண்டகத்தில் "தீர்த்தன் காண்" என அருளுவார் திருநாவுக்கரசர்.

பத்துப்பாட்டில்

பட்டினப்பாலையில் "தீதுநீங்கக் கடலாடியும் - மாசுபோகப் புனலாடியும்" என்று பண்டைத்தமிழர் உரிய நன்னாட்களில் கடல்நீரில் நீராடியும், பின்பு நன்னீரில் மாசுபோக நீராடியும் உள்ளனர். இன்று திருச்செந்தூரில் கடல்நீரில் நீராடியவர்கள் ஆங்குள்ள நாழிக்கிணறு நன்னீரிலும் நீராடி வழிபாடு செய்து வருவதைக் காணலாம். சிலப்பதிகாரத்தில், மாடலமறையவனும் மாங்காட்டு மறையவனும் குமரிமுதல் கங்கைவரை நீராடிவந்த நிகழ்வுகளும், தலங்களில் உள்ள தீர்த்த மாண்புகளும் அவர்கள் வாய்மொழி மூலம் தீர்த்தச் சிறப்புகளை அறியலாம். மெய்கண்டார் அவதாரம் நிகழ்வதற்குக் காரணமே அவர் தந்தை அச்சுதக் களப்பாளர் திருவெண்காடு முக்குளதீர்த்தம் ஆடிவழிப்பட்டதே ஆகும். அதற்குமூலம் திருவெண்காட்டுத் திருஞானசம்பந்தர் தேவாரம் ஆகும்.

நன்னாட்களில் நீராடல்

பண்டைத் தமிழ்மக்கள் உவா (பௌர்ணமி) (அமாவாசை) நாட்களிலும் பூசநட்சத்திரம் தை மாதம் கூடும் நாளிலும், இறப்பு பிறப்பு நாட்களிலும், நதிகளிலோ கடலிலோ நீராடுதல் வழக்கம். இச்செய்திகளைத் திருமுறைகளும் புராணங்களும் விளக்கமாகக் கூறியுள்ளன. ஐப்பசி மாதம் முழுவதும் காவிரியில் நீராடுங் கட்டம் - படித்துறை - இன்றும் மயிலாடுதுறையில் துலாக் கட்டம் என்று வழங்கப்படுகிறது. "பூசநாட்புகுதும் புனலாடவே" - "பூசநீர் வந்திழியும் காவிரி" என்று முறையே திருவிடைமருதூர் திருவலஞ்சுழிதேவார வரிகள் நன்னாட்களில் நீராடி வழிபடுவதை நினைவுறுத்தும்.

மகாமகம்

மாசிமாதம் வியாழன்கோள் சிம்மராசியில் இருக்கும்போது மகநட்சத்திரமும், பூராட நட்சத்திரமும் பொருந்தி வரும் காலம் மகாமகம் ஆகும்; இந்நிகழ்வு 12 வருடத்திற்கு ஒருமுறை நிகழும். இம்மகாவிழா பற்றிய குறிப்புகள் கல்வெட்டிலும் காணப்படுகிறது. கங்கை, சிந்து, கிருஷ்ணை (கோதாவரி) சரயூ, பொருநை, நர்மதை, காவிரி முதலிய நதிகளாகிய நங்கைகள் தம்மிடம் பலர் நீராடிப்போக்கிய பாவங்களை, குடந்தைநகர் நாகேசுவரரிடம் விண்ணப்பித்து, அவர் அருளால் அந்நகர் மகாமககுளத்தில் நீராடும் நாளே, மக்களுக்கும் நீராடும் உயர்ந்த நாளாகும். இவ்வாண்டு மாசிமாதம் மகாமகம் நிகழும் வருடமாகும்.

திருமுறையில்

அப்பரடிகள் அருளிய திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் தேவாரத் தாண்டகத்தில், காவிரி, யமுனை, கங்கை, சரசுவதி, பொற்றாமரை, கிருட்டிணை, குமரி ஆகிய தீர்த்தங்கள் இணைந்து ஒன்றுகூடி ஈங்கு எழுந்தருளியுள்ள சிவனை வழிபட்டு திருவருள் பெற்றதாக அருளிச்செய்வார். அவ்வருளிச் செயலில், குறிப்பாக மகாமகநாள் அவ்வழிபாட்டுநாள் என்று புராணமரபு சுட்டப்படுகிறது. அத்தாண்டகப்பாடலில் வழிபடும் மக்களின் பயனும் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது.

மகாமக சிவவழிபாட்டுப் பயன்

நம் வினைக்குரிய காரணமாக நாம் துன்பக்கடலில் துவள்கின்றோம்; அப்படித் துவள்கின்ற நாம் செய்கின்ற வழிபாட்டின் பயனாக நம்மைச் சிவம் கரை ஏற்றி அருள்வார். அதனால்

பிறவிப்பயனைப் பெற்று, பதமுத்திகளைத் தாண்டி சிவலோகத்தில் தங்கி வழிபடும் பயனைப் பெறுவோம்; அதனைத் தந்தருளும் இறைவன் நமக்கு மாயை கலவாத, அருளைநல்குவார்; அவரும் மாயை கலவாத அருட்குணம் நிறைந்தவர்; பிறவிப் பெருங்கடலை நீந்தும் நன்னாளே மகாமகம் என்று திருமுறை குறிப்பாகக் குறிப்பிடும். அத்தாண்டகப் பாடலை அந்நாளில் சிவம் முன்னிலையில் நின்று வழிபட்டு ஓதத்தக்கதாகும் :

ஏவியிடர்க் கடலிடைப் பட்டிளைக் கின்றேனை
இப்பிறவியறுத்தேற வாங்கி யாங்கே
கூவிஅமருலகனைத்து முருவிப் போகக்
குறியிலறு குணத்தாண்டு கொண்டார்போலும்
தாவிமுதற் காவிரிநல்யமுனை கங்கை
சரசுவதி பொற்றாமரைபுட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ்சூழ்ந்த
குடந்தைக் கீழ்க் கோட்டத்தெம் கூத்தனாரே

தாண்டக உரைக்குறிப்பு

தருமையாதீன உரைக்குறிப்பு இல்லையேல் இப்பாடலின் நுட்பம் விளங்காது : ஆக நன்றிஉணர்வுடன் வணங்கி நுட்பம் கண்டு மகிழ்வோம்:

I ஏவி – வினைக்கீடாக நமக்கு இறைஆணையால் வந்த வினைகள்.

II கூவி – அழைத்து : ஏறவாங்கி – கரைஏறும்படி எடுத்து

III இப்பிறவி அறுத்து – பிராரத்தை நுகர்ந்து இப்பிறவியைத் தொலைத்தபின்பு

IV குறியில் – மாயையின் தன்மை ஒன்றும் இல்லாத : அறுகுணத்து ஆண்டுகொண்டார் தமது அருட்குணம் ஆறனுள்ளும உட்படுத்து ஆண்டு கொண்டார். இறைவனது எண்குணங்களை ஆறாகக் கூறுமிடத்து, தூய உடம்பினனாதல் – இயல்பாகவே பாசங்களின் நீங்குதலிலும், இயற்கையுணர்வு – முற்றுமுணர்தற்கண்ணும் அடங்கும். அவ்வறு அடக்க அக்குணங்களை "ஆறு" என்றலும் மரபாகலின், "அறுகுணத்து ஆண்டுகொண்டார்" என்றருளினார். இதனால் பாசம் நீங்கி இறைவனை அடையப்பெற்ற உயிர், அவனது குணங்கள் எல்லாம் தன்மாட்டு விளங்கக் கொண்டு நிற்கும் என்பது பெறப்பட்டது.

V தாவி – விரைந்து : தாவிவரும் தீர்த்தம்

VI முதற்காவிரி – குடந்தையில், முதலாவது வைத்து எண்ணப்படும் காவிரி. இஃது இத்தலத்தின் அண்மையில் உள்ளது.

VII பொற்றாமரை - இது மதுரைக்கண் உள்ளது. (மீனாட்சி சுந்தரர் கோயில்)

VIII கோவி - கிருட்டிணைநதி : குமரியாறு : இதுதென்திசையில் கடல் கொள்ளப்பட்டது. அதனால், அத்தென்கடல் தீர்த்தமாம்.

IX தீர்த்தம் - மகாமகம் குளத்தைத் தீர்த்தம் என்றார்.
குடந்தைக் கீழ்க் கோட்டத்திற்கு அண்மையில் உள்ள இத்திருக்குளத்தில் தீர்த்தங்கள் பலவும் தெய்வவடிவில் வந்து கலந்து நிற்கும் என்பது புராணமாகலின், "இத்தீர்த்தம் எல்லாம் தாவி வருதீர்த்தஞ் சூழ்ந்த குடந்தைக் கீழ்க்கோட்டம்" என்று திருநாவுக்கரசர் மகாமகத்தை அடையாளம் அருளினார்.

மகாமகப் பயன் :

மகாமக நீராடினால் வினைவாதிக்காது; மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்து அடையாது. வார்த்தை சொல்லும் சற்குருவின் துணையும் கிடைக்கும். அத்துணையின் பயனாக சித்திமுத்தி சித்திக்கும். சிவன் சேவடிசேவித்து என்றும் இன்பம்பெருக இருப்பர். இதுவே தீர்த்தப்பயன்.

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

- ஆசிரியர்

சிலம்பில் இயற்கையின் சீற்றமும் மாற்றமும்

(தமிழாகரர். தெ. முருகசாமி, காரைக்குடி)

உலகம் ஐம்பூதப் பொருள்களாலானது. இது பற்றியதைப் பழம்பெரும் நூலான தொல்காப்பியம்,

நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் *(பொருளதி.மா.90)*

என்கிறது. இதில் கலந்த மயக்கம் என்பது ஒரு பொருட்பன்மொழியாய் கலந்த கலப்பிலான உலகம் எனப்பொருள்கொண்டாலும் ஐந்தையும் தனித்தனியே அறியப்படுதலோடு அவற்றை ஒன்றோடொன்று தொடர்புடையதான பிணைப்பையும் உடைய நுட்பத்தையும் ஒருசேர உணருமாறு உள்ளது.

ஒன்றோடொன்று தொடர்புடையதாகும்போது முரண்பாடில்லாத நிலையிலேயே வானின் கோள்களின் இயக்கம்போல் ஒத்திசைவுடன் உள்ளன என்பது கருத்து.

இவ் ஒத்திசைவு மரபாக இருந்தாலும் ஒரோவழி அவைதம்முள் முரண்படுங்கால் பேரழிவையும் பேரிடரையும் செய்ய ஆயத்தமாகிவிடும். அந்நிலையையே இயற்கையின் சீற்றத்தால் வரும் மாற்றம் உண்டு என உணரச் செய்கிறது.

இவ்வாறே இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கடல்கோள் நிகழ்ந்ததால் நாடு அடைந்த பேரிழப்பை வரலாறாகப் பதிவு செய்கிறார்.

கவுந்தியடிகளுடன் கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் செல்கையில் பாண்டிய நாட்டெல்லைப்புறக் காட்டில் தங்கியபோது தென்திசையினின்றும் வடதிசைசெல்லும் வழிப்போக்கன் மாங்காட்டு மறையவன் என்போன் அம்மூவரையும் கண்டு வணங்கிய நிலையில் பாண்டியனை வாழ்த்தி அவர்களுடன் அமரும்போது பாண்டிய நாட்டின் இயற்கையழிவைச் சுட்டினான்.

வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதொறும் ஊழிதொறும் உலகம் காக்க
அடியில் தன்அளவு அரசர்க் குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது

பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள

(காடுகாண்-15-20)

தமிழ்வரம்பறுத்த பாண்டிய நாட்டின் தென் எல்லையில் ஓடிய பஃறுளி ஆறும் குமரி முனையும் கடலின் சீற்றத்தால் அழிந்துவிட்ட நிலையில் பாண்டிய நாட்டின் பரப்பளவு சுருங்கிவிட்டதான வரலாற்றுப் பதிவு ஈண்டு இளங்கோவடிகளால் சுட்டப்பட்டுள்ளது.

கடலைக் கொடுங்கடல் என்றதால் கடலானது தன்னிலையினின்றும் மாறிச் சினந்தெழுந்துப் பொங்கிப் பெரிய பரப்பளவுடைய பாண்டிய நாட்டின் பகுதிகளை விழுங்கித் தன் வயிற்றுட் கொண்டதன் ஆற்றாமையை வெளிப்படுத்துவார் போல இளங்கோ கூறியுள்ளார்.

கடல் சீற்றங் கொண்டதற்கான காரணத்தை இளங்கோவடிகள் 1. அடியில் தன் அளவு அரசர்க்குணர்த்தி, 2. வடிவேல் எறிந்த வான் பகை பொறாது என இரண்டாகக் கூறுவது கதையளவிலான கற்பனைப்படுத்தப்பட்டதாயினும் ஐம்பூத இயற்கை நிகழ்வில் நிலத்தடி நீர் அமுக்கம், பெருங்காற்றின் துணை போன்றவற்றால் பேரிடர் நேரவே செய்யும் என்பது விஞ்ஞான வித்தகம் எனலாம்.

1. பாண்டியன், தன் பகைவர்க்குத் தன்பெருமையைக் காட்டுவதற்காக, கடல் எந்த அளவிற்குப் பெரியதோ அந்த அளவிற்குப் பெரியவன் எனச் சுட்டி உணர்த்தக் கடலைத் தன் கையால் காட்டாமல் காலால் மிதித்துக் காட்டியதால் கடல் சினந்ததாம்.

2. மேற்படியான சினம் அடங்கியிருந்து மற்றொரு காலத்தில் அச்சினத்தைத் தணித்துக்கொள்ளப் பொங்கியபோது பாண்டியன் ஒருவன் தன்கைவேலால் எறிந்து கடலின் சீற்றத்தை அடக்கினான்.

இங்ஙனம் கடலுக்கு நேர்ந்த துன்பம் நெடுநாளைய பகையாய் உள்ளுக்குள் இருந்து ஒரு காலத்தில் குமுறி வெளிப்பட்டதால் கடல்கோள் என்ற வகையில் நாட்டெல்லையை உள்வாங்கிக் கொண்டது. இங்ஙனம் பழிதீர்த்துக்கொண்டதாகக் கூறப்படுவதில் மூன்று வகையான கடல் சீற்றத்தின் உண்மை அறியப்படுகிறது.

1. வடிம்பலம்ப நின்ற பாண்டியன் காலத்தில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. அதனால் அழிவு இல்லை. 2. கடல் சுவற

வேலெறிந்த உக்கிர குமார பாண்டியன் காலத்தில் கடல் கொந்தளித்தது. அதனாலும் அழிவு இல்லை. 3. இவ்விரண்டு மாமன்னர்கள் காலத்திற்குப்பிறகு கடல் கொந்தளித்ததால் பஃறுளியாற்றையும் குமரிமலையையும் பாண்டியநாடு இழந்தது.

இந்தக் கடல்கோளைக் கடல் கோட்படுதல் என்பார் அடியார்க்கு நல்லார் என்னும் சிலப்பதிகார உரையாசிரியர். கோட்படுதல் என்றால் கடற்கொள்ளைக்கு ஆளாதல் என்பது கருத்து.

கூறைகோட்பட்டான் எனத் தொல்காப்பியத்தின் உரையில் சேனா வரையர் வழிபறிக் கொள்ளையர்களால் வழிப்போக்கர்கள் தங்கள் ஆடையை இழந்தனராம் என்பது போலப் பாண்டியநாடு கடற்கொள்ளைக்கு ஆளானதாம் என்க!

இங்ஙனமாக நடப்பது ஒரோவழியேயல்லாமல் எங்ஙான்றும் இல்லை. ஏனெனில் கடல்வளத்தால் சோழநாடும் பாண்டிய நாடும் பெற்ற வளங்களை இளங்கோ பலவாறாகப் புகழ்கிறார். ஆக இன்னாதம்ம கடல் என்ற குறிப்பைக் காடு காண்காதையால் உணர்வதென்பது கதைப்பாங்கான நாட்டுவரலாறாம் என்க!

இங்ஙனம் ஐம்பூதத்தில் நீரால் நிகழ்ந்த பேரிடரைச் சுட்டிய இளங்கோவடிகள் இயற்கையின் சீற்றமாய் உணர்த்தினாலும் அந்த இயற்கையின் இயல்பைச் சீற்றமாக இல்லாமல் உவமைவகையால் மாற்றிக் கூறுவதைக் காப்பியத் தொடக்கமாகக் கூறுவது ஓர் இலக்கிய உத்தியாக உணரத் தோன்றுகிறது. அதாவது காடுகாண் காதையின் தொடக்கத்தை ஓர் இலக்கிய உத்தியாகக் கொண்டது போலக் காப்பியத் தொடக்கத்தையும் ஓர் இலக்கிய உத்தியாக்கினார் என்பது கருத்து.

பாண்டிய நாடும் பாண்டியனும் அழியப்போகும் நடப்பின் கதைக்குக் கட்டியம் கூறுவதாகவே மாங்காட்டு மறையோன் கூற்று அமைந்துவிட்டது. மதுரைக் காண்டத்தின் தொடக்கக் காதை காடுகாண் காதை. மரஞ்செடி கொடிகள் அடர்ந்ததும் விலங்குகள் மண்டி வாழ்வதுமான இடமே காடாயினும் காடு என்ற சொல் இடுகாடு சுடுகாடு எனும் ஓர் அவலத்தைக் குறிப்பதாகவே அமையுமாறு இளங்கோ நாடகப் பாங்காய் அமைத்துவிடுகிறார்.

தொல்காப்பியத்தில் "காடுவாழ்த்து" எனத் தொல்காப்பியர் (பொரு.புறத்.24) சுடுகாட்டின் இயல்பைச் சுட்டுமாப் போலே ஈண்டு

இளங்கோவடிகளும் மதுரைக் காண்டத் தொடக்கம் பாண்டிய நாட்டின் அழிவிற்கான முன்னோட்டத் தொடக்கம் எனலாம். இந்தப் பொதுக் குறிப்பின் தொடர்ச்சியாகவே பஃறுளியாறும் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ளப்பட்டதாகக் காடுகாண் காதையின் தொடக்கமும் அமைகிறது. என்னே இளங்கோவின் இலக்கிய உத்தி!

இங்ஙனம் இயற்கையின் சீற்றத்தால் நாட்டின் அழிவுடன் நற்றமிழ்க் காப்பிய மாந்தர்களின் அழிவையும் ஒருசேரக் காட்டும் அடிகள் இயற்கையின் இயல்பை உவமை கூறிய பாங்கால் அதன் மாற்றத்தைக் காப்பியத் தொடக்கத்தில் மங்கலவாழ்த்துப் பாடலில் குறிப்பது ஒட்டுமொத்த காப்பியப் பாங்கை உணரச் செய்யுமாறுள்ளது.

மாற்றம் என்பது ஏற்றத்தின் பொருளாயும் புதுவளர்ச்சியின் துளிர்ப்பாயும் முற்றிலும் மாறிவிட்டதான அழிவையும் குறிக்கலாமாயினும் ஈண்டு இளங்கோவடிகள் நெஞ்சையள்ளுமாறு செய்யவேண்டும் என்ற திட்டமிட்டவாறு காப்பியத்தை அமைத்ததால் தமிழுக்கான ஏற்றத்தோடு கூடிய புதுவரவை உண்டாக்க இயற்கையைச் செயற்கையோடு இணைத்து இயற்கையின் தோல்வியை ஊடலில் தோற்றவர் வென்றார் (1327) எனும் அய்யன் திருவள்ளுவத்திற்குச் சான்று பகருமாறு அடிகள் செய்துவிட்டதுதான் இயற்கையின் ஏற்றத்தினும் காப்பிய ஏற்றம் வீறு கொள்கிறது எனலாம்.

பொதுவாக நூல் இயற்றுவோர் கடவுள்வாழ்த்துடன் நூல் தொடங்குதல் முறையாயினும் இளங்கோவடிகள் உலகின் இயற்கைக் கூறுகளான திங்கள், சூரியன், மழை போன்றவற்றுடன் நிலத்தையும் போற்றி வணங்கும் முறையில் பூம்புகாரையும் போற்றுதும் என்பதாகச் சிலப்பதிகாரத்தைத் தொடங்குகிறார்.

திங்கள், ஞாயிறு, மாமழை, பூம்புகார் என்ற நான்கு அடுக்கினும் ஓர் இயைபு உள்ளது. புகாரைத் தவிர்த்த நிலம் சார்ந்தது. திங்களும் ஞாயிறும் ஒளிச்சுடர்கள். மழை - நீர்க் கூறானது. உலகம் ஐம்பூதங்களாலான இயற்கையின் குறிப்பை இங்ஙனம் கூறும் குறியீட்டுப் பெயர்களால் உணரலாம். இவற்றுள் காற்று பற்றியதற்குக் குறிப்பாக யாதொன்றும் இல்லையாயினும் "வளிவழங்கு மல்லல்

மாஞாலம்" (குறள் 245) என்றதற்கொப்ப அதுபற்றி (காற்று)க் கூறப்பட்டதாய் யூகிக்கலாம்.

வெளிப்படையாகக் கூறப்பட்ட நான்கினுள் திங்கள், சூரியன், மழை என்ற மூன்றின் இயக்கங்கள் என்றும் இயற்கையானவை. இவ்வியற்கைத் தன்மையை இளங்கோ கவிதைப் பாங்கில் அரசனின் இயல்புபோன்றதாக மாற்றி உரைக்கிறார். அதினும் சோழ மன்னன் இயல்பைச் சுட்டியே உவமான உவமேய அடிப்படையில் இயற்கையின் இயல்புக்கு மாற்றுகற்பிப்பதையே இயற்கையின் மாற்றமாக உணருமாறுள்ளது.

1. சோழனின் வெண்கொற்றக் குடைபோன்று திங்கள் ஒளிர்கிறது. சோழனின் வெளிப்படைத்தன்மையான குளிர்ந்த செங்கோலாட்சியின் பரப்பைப்போல நிலவின் வெண்மையும் அதன் ஒளியின் பரப்பும் உணருமாறுள்ளது.

2. சோழனின் ஆட்சிப்பரப்பும் ஆணையின் விரிவும் போலச் சூரியன் உலகைச் சுற்றி வருகிறானாம். ஆணயின் செயல்பாடு - எப்போதும் எங்கும் உள்ளதுபோலச் சூரியனுக்குரிய ஒளியும் எப்போதும் உண்டு.

3. சோழனுடைய தண்ணளி (கருணை) போல மழை பொழிகிறதாம்.

கூறப்பட்ட மூன்றும் உவமை உவமேயமாய் அமையும்போது இயற்கையின் இயல்பிற்குச் சோழனை உவமைப்படுத்திக் கூறியதுதான் இயற்கையைக் கவித்துவத்தால் மாற்றிய சிறப்பாகும். இங்ஙனம் மாற்றக் காரணம் யாது? எனில் திட்டமிட்டுச் செய்யப்படும் காப்பியத்திற்குத் துணையாக அமையவே சோழ அரசனின் இயல்பை இயற்கைக்கூறுகளோடு பொருத்திப் பார்த்து அனுபவித்த நாடகத் தமிழ்ச்சுவையாம் எனலாம்.

உள்ளுங் காலை உவமை உயர்ந்ததன் மேற்று என்ற தொல்காப்பியத்தின்படி இளங்கோ, அணியிலக்கணக் கோட்பாட்டிற்கு அரண் செய்தாலும் காப்பியப் போக்கின் முன்னோட்டத்திற்கான குறியீடாய் அவற்றை அமைத்தார் என்பதே நெஞ்சையள்ளும் கருத்தாக மேலோங்குகிறது.

அகப்பொருள் போக்கில் களவு ஒழுக்கத்தை வெளிப்படையாகக் காட்டி அதுவே கற்பாம் திருமணம் என்ற செயற்பாட்டைக் காட்டுவதாக அமைக்காமல் காப்பியத் தொடக்கமே திருமணத்தில் தொடங்குகிறது. இதனை நாடக அமைப்பில் கூறினால் இன்பியலில் தொடங்கித் துன்பியலில் முடிக்கும் கதைப்போக்கும் சிறந்த புதுமாற்றத்தைக் காப்பிய உலகிற்குக் கொடையாகத் தருகிறார் இளங்கோவடிகள் எனலாம்.

திருமண வாழ்த்தும் இயல்பாக இல்லாமல் எதிர்மறையிலேயே அமைகிறது. இல்லறத்தின் மாண்புடன் வாழத் தலைப்பட்ட கண்ணகியின் அமைதி, சீற்றமுடையதாக மாறுகிறது. இப்படிப் பற்பல புதுமைக்கும் சிறப்பால் படிப்படியே எழும் மாற்றங்கள், காப்பியத்தைக் கற்கும்வ ளர்ச்சிக்குரிய உத்தியாக அமைகின்றன.

மேலும் ஈண்டு ஒன்றை நுட்பமாக உணரவேண்டும். பொதுவாக ஓர் அரசனின் செங்கோல், ஆணை தண்ணளி எனக் கூறாமல் சோழனைச் சுட்டியதால் பிற அரசர்களை வேறுபடுத்திய மாற்றத்தையும் உணரவேண்டியுள்ளது.

கதைப்போக்கில் சோழனுக்குக் கதாப்பாத்திரத் தொடர்புகள் மிகுதியும் இல்லை. மாதவியின் சோழநாட்டு வரவால் கோவலனோடு தொடர்புகொள்ளுதற்கு அவளது நடனக் காட்சி அரங்கேறும் இடமாகச் சோழனது அவை பயன்படுகிறது என்ற தொடர்பு மட்டுமே உள்ளது.

பாண்டியனுக்குப் பல தொடர்புகள் உள்ளன. சேரனுக்கும் உள்ளன. எனினும் உடன்பாடாக மட்டும் இல்லாமல் எதிர்மறையாகவும் அமைகின்றன. பாண்டியனைப் பொறுத்தமட்டில் ஏற்ற இறக்க மாற்றங்கள் மிகுதி. ஆனால் சேரனைப் பொறுத்தமட்டில் ஏற்றங்களே மிகுதியாயினும சோழ, பாண்டியரோடு ஒத்துப்போகாத சிறு மாற்றம் ஒரோவழியான இறக்கத்தைத் தருகிறது.

ஆக முடியுடை வேந்தர் மூவரினும் சோழனுக்குள்ள சிறப்பின் மிகுதியால் சோழன் உவமையாகச் சுட்டப்பட்டதற்கேற்பவே இளங்கோவடிகள் பூம்புகார் போற்றுதும் என்றார் போலும்!

இன்னும் இதனை வேறொரு வகையிலும் சிந்தித்தால் சோழனை மட்டுமே கூறியது பொருந்தும் என்பதை உறுதிப்படுத்தலாம்.

திங்கள், ஞாயிறு, மழை என வரிசைப்படுத்திய மூன்றும் பாண்டியனையும் சோழனையும் சேரனையும் குறிப்பாக உணர்த்துவதாய்க் கூறுவர். சந்திர மரபைப் பாண்டியன் உடையவன். சூரிய மரபைச் சோழனும், மழையுள்ள வானவர் மரபைச் சேரனும் உடையவர்களாகக் கருதப்படும் நிலையில் களங்கம் உடைய திங்கள் போல அரசியல்பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்ற களங்கமான அரசியலுக்குப் பாண்டியன் எடுத்துக்காட்டாகிவிடுகிறான்.

மழையும் கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் எடுப்பதூஉம் ஆகிய நிலையைப் போலச் சேரன் கண்ணகிக்குக் கோயில் எழுப்பும் சிறப்பால் ஏற்றம் பெற்றாலும் சோழபாண்டியர், தம் வெற்றியைப் பழித்ததால் சினந்து அவர்கள் மீது போர்தொடுக்க எண்ணிய தடுமாற்றத்தோடு மாடலனால் மடைமாற்றம் செய்யப்பெற்றவனாய் மீண்டும் கோயில் எழுப்பத் துணிகிறான். ஆனாலும் சோழ பாண்டியர்கள் மீது சினம் மாறா நிலையால் அவர்களைக் கண்ணகிக் கோட்டத் திறப்புக்கு வரவழைக்காத களங்கம் சேரன்மீது அமைந்துவிடுகிறது. முடியுடைவேந்தர் மூவர்க்கானது இக்காப்பியம் என்றதற்குரிய கருத்துக்குக் குறை நேருமாறு சேரனின் இச்செயல் அமைவதால் பாண்டிய நாட்டையும் சேரநாட்டையும் முழுமையாகப் போற்றமுடியாத காரணத்தால்தான் இளங்கோவடிகள் சோழனை உவமைப்படுத்தியதோடு அவனது புகாரையும் வாழ்த்தி வணங்கினாரோ என எண்ணுவதில் தவறேதும் இல்லை எனலாம்!

திங்கள் தேய்வும் வளர்ச்சியும் உடையது. மழை வேண்டியபோது பெய்யாததோடு தான் விரும்பியவாறு பெய்யும் குறை உடையது. இவற்றிற்கு மாறாகச் சூரியன் எப்போதும் ஒளிரும் தன்மை உடையது. அது மறைந்ததாகத் தெரிந்தாலும் வேறோர் இடத்தில் ஒளிர்வதால் எப்போது ஒளியுடைய சிறப்பைப் போலச் சிலம்பின் அமைப்பில் சோழன் சிறப்பிக்கப்பட்டான் போலும்! ஆக இளங்கோவின் எழுத்தியற்கையை என்னென்பது!

> நெஞ்சிலே குற்றமுள்ளவர்கள் ஒவ்வொரு கண்ணும் தங்களையே பார்ப்பதாக எண்ணுவர். – ஷேக்ஸ்பியர்

நயம்பாடி
உலகத் திருக்குறள் பேரவை
15.01.2016இல் ஐம்பெரும்விழா

விழாவிற்கு நல்லாசிரியர் சிகோ. சடகோபன் அவர்கள் தலைமை வகித்தார். அனைவரையும் முனைவர். நயம்பு. அறிவுடைநம்பி வரவேற்றுப் பேசினார். திருவள்ளுவர் படத்தை நீதிஅரசர் பா. செயபாலன் அவர்கள் திறந்துவைத்தார்.

திரு. அ. மதிவாணன் திரு. V.A. திரேஸ்நாதன் திரு. இலலிதா சுந்தரம், திரு. செ. பாபு ஆகியோர்க்குக் கல்விப்பணிச் செம்மல் விருது வழங்கப்பட்டது.

முனைவர் நயம்பு. அறிவுடைநம்பி எழுதிய நூல்களான ஒப்புமையில் வள்ளுவம் என்ற நூலை செஞ்சி பேரவையின் மதிப்பியல் தலைவர் டாக்டர்.கோ. அண்ணாமலை வெளியிடவும் திருக்குறள் சிந்தனைக் களஞ்சியம் என்ற நூலை மத்திய அரசின் மேனாள் நிதித்துறை இணையமைச்சர் செஞ்சி. நா. இராமச்சந்திரன் அவர்கள் வெளியிடவும் செய்து சிறப்புரையாற்றினார்.

திருக்குறள் போட்டிகளுக்கு டாக்டர். சுகன்யாவும் பள்ளியில் தேறிய மாணவர்களுக்கு குமாரி அறிவுடைநம்பியும் பரிசளித்தனர்.

விழா நிகழ்ச்சிகளை நல்லாசிரியர் புருடோத்தமன் தொகுத்து வழங்கினார். புலவர். செ. பாபு நன்றி நவில நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நடந்தேறியது.

16.01.2016இல் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருக்குறள் விழா மற்றும் மாநாட்டில் முனைவர்

கு. மோகனராசு அவர்கள் தலைமையில்

பேராசிரியர் வளனரசு அவர்கள் முன்னிலையில் மருத்துவமாமணி எம்.ஏ.உசேன் அவர்கள் முனைவர்.நயம்பு.அறிவுடைநம்பி அவர்களுக்கு

வள்ளுவர் கோட்டத்தின் உயரிய விருதான "திருக்குறள் ஞானபீட விருது" வழங்கிப் பாராட்டிச் சிறப்பித்தார்கள்.

வாழிதிரு வள்ளுவர் விருதாளர் வித்தகம்

(தமிழாகரர். தெ. முருகசாமி)

அளப்பரும் ஆற்றல் அருள்நெறித் தந்தை
உளப்பாங் கின்படி உயர்துற வேற்றப்
பொன்னார் பொன்னம் பலநல் அடிகள்
தன்னார் வத்தால் தாம்சேர் குன்றக்
குடியின் திருமடம் குவலயம் போற்றப்
படிபுகழ் பலர்வாழ் தில்லிமா நகரில்
தேனார் திருவள் ளுவர்பேர் விருதை
ஆனாப் புகழுடன் அள்ளி வந்ததால்
உலகத் திருக்குறள் பேரவைத் தொண்டின்
அலகிலா நல்அடை யாளம் என்பேன்!
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் விருதுதான்
இருந்தமிழ் அடிகளார் பெற்றதால் ஏற்றம்
பெற்றதே என்பேன்! பெருந்திருக் குறட்புகழ்
உற்ற உத்தமர் தருண்விஜய் என்னும்
தமிழர் அல்லாத் தமிழ ரான
அமிழ்தின் இனியர், அடிகள் தம்மை
அடையா ளங்காண் அற்புதத் தாலே
படையால் கனக விசயரை வென்ற
காலக் கொடையாய்க் கன்னித் தமிழ்ச்செங்
கோலாம் திருக்குறள் கொள்கை ஓங்கிடும்
தில்லிமா நகரும் திசைகள் எட்டும்
மல்லிகை மணமாய் மாத்தமிழ் நாடும்
அடிகளைப் போற்றி அனைவரும் வணங்கி
வடியாக் கிளர்வி வளம்தரும் வகையாய்
வாழி திருவள் ளுவர்விரு தாளர்
சூழி அவர்தம் திருக்குறள் வித்தகம்
என்றே விளம்பினர்! அவ்விரு தாளர்
நன்றே அருளும் நனிபுகழ் தையின்
இனிப்புறு பொங்கல் ஆசி வேண்டியே
நுனிக்கரும் பாக நுவன்றுநின் றனனே!

சிறப்பாசிரியருக்கு வந்த கடிதங்கள்.....

திருக்குறள் சிந்தனையை சிறப்பாக மக்கள் மனதில் கொண்டு சென்ற பணியில் திருவள்ளுவர் விருதை டில்லி மாநகரில் பெற்று வந்த பெருந்திரு குருமகாசந்நிதானம் பொன்னம்பல அடிகளார் அவர்களுக்கு பாராட்டு வாழ்த்துக்கள்.

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறத் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஆத்மாவிற்கு சிறப்புத் தேடித்தந்த நிகழ்வுகளில் இது மிகவும் போற்றுதலுக்குரியது என்பேன்.

– **சி. சண்முகானந்தம்**, கோபாலசமுத்திரம்

பாரதத் திருநாட்டின் தலைநகராம் புதுதில்லியில் நாடாளுமன்ற மாமன்றத்தில் 17.12.2015இல் தவத்திரு அடிகளார் அவர்கள் "திருவள்ளுவர் மக்கள் விழிப்புணர்வு விருது" பெற்ற பெரும் நிகழ்வினைத் தொலைக்காட்சியில் கண்டு உள்ளம் பூரித்தேன். மறுநாள் செய்தித் தாள்களிலும் படித்து மகிழ்ந்தேன்.

தமிழகத்தில் தமிழ்மாமுனிவர் தொடங்கி நடத்திய உலகத் திருக்குறள் பேரவையைத் தொடர்ந்து நடத்திவரும் நம் வணக்கத்திற்குரிய சுவாமிகள் பெற்றது திருக்குறளுக்குக் கிடைத்த நாடுதழுவிய பாராட்டாகும். சுவாமிகளின் திருக்குறள் தொண்டு வடவேங்கடம் கடந்து, இமயம்வரை பரந்து உயர்ந்தது. இனிவருங்காலத்தில் சுவாமிகளின் உலகத் திருக்குறள் பேரவை உலகளவில் பேரும் புகழும் விரைவில் பெறும் என்பது திண்ணம்.

சுவாமிகள் பெற்ற பாராட்டும் விருதும் திருக்குறள் தொண்டர் ஒவ்வொருவரும் பெற்ற பெரும்பேறாகும்.

– **நயம்பு அறிவுடைநம்பி**, நயம்பாடி

17.12.2015 அன்று நம் பாராளுமன்ற வளாகக் கட்டட அரங்கில், உத்தரகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்த மாநிலங்கள் அவை உறுப்பினர் திருமிகு. தருண் விஜய் அவர்கள் மூலம் நடந்த திருக்குறள் விழாவும், அதனைத் தொடர்ந்து, சமூகம் திருக்குறள் பற்றிப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திவரும் செயலினைப் பாராட்டி மகிழும் வகையில், "திருக்குறள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதற்கான விருது" சமுகத்துக்கு வழங்கிப் பாராட்டிச்

சிறப்பித்த நிகழ்ச்சியையும், அந்நிகழ்ச்சியில் கட்சிவேறுபாடின்றி அனைத்துப் பெருமக்களும் திரளாகக் கலந்து கொண்டு சமுகத்தைச் சிறப்பித்த நிகழ்ச்சியையும், அந்நிகழ்ச்சியில் கட்சி வேறுபாடின்றி அனைத்துப் பெருமக்களும் திரளாகக் கலந்துகொண்டு சமுகத்தைச் சிறப்பித்த மகிழ்ந்ததையும் பற்றி நம் மக்கள் சிந்தனை அட்டைப்படம், உள்ளே நம் செல்வராசு எழுதிய செய்தி ஆகியவற்றின் மூலம் அறிந்து பெரிதும் மகிழ்கின்றேன். இது சமூகத்துக்கும், நமது உலகத் திருக்குறட் பேரவைக்கும் கிடைத்த அரிய விருது என்பதை எண்ணிக் களிக்கிறேன்.

திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்கவேண்டும் என்ற வணக்கத்துக்குரிய அருள்நெறித்தந்தையவர்களின் தொடர்முயற்சி, தங்கள் மூலம் வெற்றியடைந்து வருவதை இந்நிகழ்ச்சி உணர்த்துகிறது.

இந்நிகழ்ச்சி தங்கள் மூலம் திருக்குறட்கும், நம் உலகத் திருககுறட்பேரவைக்கும் பேரும் பெருமையும் சேர்ப்பதாகும். இவ்வகையில் அருள்தரு சண்முகநாதப் பெருமான் திருவருளும், அருள்தரு காளத்தியப்பர் திருவருளும் மேன்மேலும் வாய்க்க வணங்கி மகிழ்கிறேன். வணக்கம்.

– பூவாளூர். க. கதிரேசன்

“வான்சிறப்பு” பற்றியும் “மரம் வளர்ப்பு” பற்றியும் வானொலியில் தாங்கள் நிகழ்த்திய உரையைக் கேட்டேன். மனமகிழ்ச்சியும் பெருமையும் கொண்டேன்.

நான், எனது சொந்த செலவில் சாலை ஓரங்களிலும், கரைகள் உடையாமலிருக்க ஆற்றுக் கரைகளிலும், பள்ளி வளாகங்களிலும் பலமரங்களை வளர்த்துள்ளேன். “மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்” வாசகம் வெற்று முழக்கமாகவும் வாகனங்களின் பின்புறமும் மட்டுமே உள்ளது.

உயிர்கள் உயிர்வாழ மரங்களின் அவசியத்தை நான் உணர்ந்தவன். சாலையின் ஓரங்கள், குளம், ஏரி, ஆறுகள், மக்கள் கூடும் இடங்கள், அலுவலகங்கள், பள்ளிகள் போன்ற இடங்களில் மரம் வளர்க்க என்னால் முடியும். எனது உடலில் சக்தி உள்ளவரை மரங்களை வளர்க்க விரும்புகிறேன்.

– மா. சிவகுருநாதன், குமராட்சி

4.1.2016 FM ரேடியோவில் பிச்சைக்காரன் உணவு கேட்டது, அதை திருப்பிக் கொடுத்தது, காரணம் கேட்டபோது உன் கணவர் 25 ஆண்டுகள் பட்டபாட்டை அவனால் நேரில் சொல்லமுடியாமல் எனக்கு ரூ. 10/- கொடுத்து சொல்லச் சொன்னான், என சகிப்புத்தன்மை பற்றி தாங்கள் கொடுத்த விளக்கம் அருமை.

- வ. பழநிக்குமார், கண்டவராயன்பட்டி

சென்னை தினத்தந்தி 17.12.2015 நாளிதழ் பக்கம் 15இல் ஹாலோ FM 106இல் மார்கழி மாதம் முழுவதும் காலை ஐந்து மணிக்கு ஒலிபரப்பாகும் எனச் செய்தி வெளியிடப்பட்டது. மார்கழி ஆத்திசூடி அரிய பொக்கிசம். அருளுரை மட்டும் அல்ல, அறிவு பொக்கிசம் முப்பது நாள் என்ன? வருடம் 365 நாட்களும் செவியில் செய்தி கிட்டாதா? என ஏங்கி நிற்கின்றேன்.

- ச. சுப்பிரமணியன், கொடுங்கையூர்

தங்களுக்கு மத்திய அரசு, தங்களின் திருக்குறள் பரப்பும் சேவையைப் பாராட்டி விருது வழங்கியது அறிந்து மெத்த மகிழ்ச்சியடைந்தேன். "மக்கள் சிந்தனை" இதழில் சமய, சமுதாய சிந்தனைகளுடன், தங்களின தலையங்கக் கட்டுரை மிகவும் எளிமை நடையில் சீரிய கருத்துக்களை எழுதும் அழகு என்னை மிகவும் கவர்ந்தது. தங்களின் திருக்குறள் பரப்பும் சேவைக்கு எனது பாராட்டுதல்கள். மிக்க நன்றி. **- கவிஞர். பரணி**

திருவள்ளுவர் மக்கள் விழிப்புணர்வு விருது பெற்ற நமது குருமகாசன்னிதானம் அவர்கட்கு எனது எளிய வாழ்த்து.

"பொய்யா மொழிக்கு புத்துரைகாட்டி
புலமையில் உயர்ந்த எங்கள் அடிகளே!
உய்யும் நெறிக்கு குறள்நெறி நாட்டும்
மெய்யனே விருது பெற்றீர் வாழியே"

என வணங்குகிறோம்.

- பெ. தருமலிங்கம், குன்னத்தூர் புதூர்

மதுரை இராஜா முத்தையா மன்ற தமிழிசை விழாவில் தாங்கள் ஆற்றிய பேருரை சிகரம் தொட்டது.

ஆன்மிகக் கருத்துக்களின் ஆழம், இலக்கிய நயம், உருக்கமான நிகழ்வுகள், இயல்பான நகைச்சுவை ஆகியவை

4.1.2016 FM ரேடியோவில் பிச்சைக்காரன் உணவு கேட்டது, அதை திருப்பிக் கொடுத்தது, காரணம் கேட்டபோது உன் கணவர் 25 ஆண்டுகள் பட்டபாட்டை அவனால் நேரில் சொல்லமுடியாமல் எனக்கு ரூ. 10/- கொடுத்து சொல்லச் சொன்னான், என சகிப்புத்தன்மை பற்றி தாங்கள் கொடுத்த விளக்கம் அருமை.

– வ. பழநிக்குமார், கண்டவராயன்பட்டி

சென்னை தினத்தந்தி 17.12.2015 நாளிதழ் பக்கம் 15இல் ஹாலோ FM 106இல் மார்கழி மாதம் முழுவதும் காலை ஐந்து மணிக்கு ஒலிபரப்பாகும் எனச் செய்தி வெளியிடப்பட்டது. மார்கழி ஆத்திசூடி அரிய பொக்கிசம். அருளுரை மட்டும் அல்ல, அறிவு பொக்கிசம் முப்பது நாள் என்ன? வருடம் 365 நாட்களும் செவியில் செய்தி கிட்டாதா? என ஏங்கி நிற்கின்றேன்.

– ச. சுப்பிரமணியன், கொடுங்கையூர்

தங்களுக்கு மத்திய அரசு, தங்களின் திருக்குறள் பரப்பும் சேவையைப் பாராட்டி விருது வழங்கியது அறிந்து மெத்த மகிழ்ச்சியடைந்தேன். "மக்கள் சிந்தனை" இதழில் சமய, சமுதாய சிந்தனைகளுடன், தங்களின தலையங்கக் கட்டுரை மிகவும் எளிமை நடையில் சீரிய கருத்துக்களை எழுதும் அழகு என்னை மிகவும் கவர்ந்தது. தங்களின் திருக்குறள் பரப்பும் சேவைக்கு எனது பாராட்டுதல்கள். மிக்க நன்றி.

– கவிஞர். பரணி

திருவள்ளுவர் மக்கள் விழிப்புணர்வு விருது பெற்ற நமது குருமகாசன்னிதானம் அவர்கட்கு எனது எளிய வாழ்த்து.

"பொய்யா மொழிக்கு புத்துரைகாட்டி
புலமையில் உயர்ந்த எங்கள் அடிகளே!
உய்யும் நெறிக்கு குறள்நெறி நாட்டும்
மெய்யனே விருது பெற்றீர் வாழியே"

என வணங்குகிறோம்.

– பெ. தருமலிங்கம், குன்னத்தூர் புதூர்

மதுரை இராஜா முத்தையா மன்ற தமிழிசை விழாவில் தாங்கள் ஆற்றிய பேருரை சிகரம் தொட்டது.

ஆன்மிகக் கருத்துக்களின் ஆழம், இலக்கிய நயம், உருக்கமான நிகழ்வுகள், இயல்பான நகைச்சுவை ஆகியவை

நோக்காது, தன் குருமாமுனிவர் அருள்நெறித்தந்தை அவர்களை சிந்தித்தவாறு இருக்கும் தோற்றத்தில் அடிகளாரைக் காணும்போது உள்ளமெலாம் மகிழ்ச்சி வெள்ளம்!

பின்னணிப் பதாகை மேலும் மகிழ்ச்சியைக் கூட்டியது. இந்தி அரசோச்சும் தில்லிப் பாராளுமன்றக் கட்டடத்தில் தலையாய இடத்தில் தமிழும், அடுத்த இடத்தில் இந்தியும் மூன்றாமிடத்தில் ஆங்கிலமும் பொறித்திருக்க, குமரிக்கடலில் நின்ற நெடுங்கோலத்து வள்ளுவப் பெருந்தகை பாராளுமன்றக் கட்டடத்தை உற்றுநோக்குவதும் இந்திக்கு மேலான இடத்தை தமிழுக்கு தமிழகத்தில் கேட்டுத்தானே 1965ல் அருள்நெறித்தந்தையும் மொழிப்போர்க் களத்தில் குறித்த நினைவும் இன்று தில்லியிலேயே தமிழுக்குத் தலையாய இடம் கிடைத்துவிட்டதே என்ற பெருமிதமும் கொண்டேன்.

தவத்திரு அடிகளாருக்கு விருது வழங்குவிழா மூலம், தமிழுக்கும், திருவள்ளுவருக்கும் வடபுலத்து தலையாய இடம் கிடைத்த இவ்வண்ணப்படம் தமிழர்தம் இல்லமெலாம் ஒளிர்ந்து அவர்தம் உள்ளமெலாம் குறள்நெறி நிரப்பவேண்டும்.

அகவை 84ல் வலது கண்பார்வை இழந்து கருவிழி பாதிப்பின் வலி குறைய நாளும் 5 முறை சொட்டுமருந்து போட்டுக் கொண்டிருப்பதால் இவ்வரிய காட்சியினை தொலைக்காட்சியில் காணக்கூடத் தவறினேன்.

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராகிய தவத்திரு அடிகளார் அவர்களை வணங்கி, வாழ்த்திப் பாராட்டி மகிழ்கின்றேன்.

– நாகூர் **சோமசுந்தரத் தேவர்**, பிள்ளையார்பட்டி

கால்களையும், கண்களையும் இழந்தவன் பற்றி போகி பண்டிகைக்கும், கணவன் – மனைவி விரிசலை, வங்கியில் செல்வத்தை சேர்த்த உள்ளன்பை புரிந்து இணையும் இனிமையான சர்க்கரை பொங்கலையும் நெல்மணிகளை தந்துவிட்டு, ஒதுக்கும் வைக்கோலை உணவாய் ஏற்று சிவபெருமானின் வாகனமாக (நந்தி) காளையை குறிப்பிட்டதும் அடிகளாரின் அற்புதமான உதாரணம். பாராட்டுக்கள். வாழ்த்துக்கள்.

– **வ. பழனிக்குமார்**, கண்டவராயன்பட்டி

ஒரு வேலையைவிடக் கவலையே அதிகமாக மனிதர்களைக் கொல்கிறது. இதற்குக் காரணம், வேலை செய்வதைவிட, கவலைப்படுவதிலேயே அதிகமாக மனிதர்கள் ஈடுபடுவதுதான். **– ஜான் கேர்ன்ஸ்**

வள்ளுவர் குறள்போல் என்றும் வாழ்க!

(கவிச்சுடர். அழகுதாசன், கோவை)

அன்பெனும் சுனையே அறிவெனும் ஊற்றே! - இனிய
கனிவெனும் ஒளியே! கருணையின் உருவே
மானிட நேயத் துறவற நெறியே
மாட்சிமை மிக்கத் தவத்திரு மணியே!

குவலயம் போற்றும் சிவனருள் சித்தர் - உலகத்
திருக்குறள் தொண்டில் ஓர்பெரும் புத்தர்
பவளமாய்த் திகழும் மணித்திரு வடிவே
பன்நலம் புரியும் குன்றக் குடியே!

பக்தியைப் பரப்பும் தமிழ்ப்பெரும் ஞானி - சங்கப்
பைந்தமிழ் பொழியும் இலக்கியத் தேனி
சித்தமே மொழியும் மகாசன் னிதானம்
செந்தமிழ் வளர்க்கும் ஞான சம்பந்தர்!

தவத்திரு அடிகளார் குன்றக் குடியின் - சீர்வளர்
தவமாய் வந்த பொன்னம் பலமே
சிவப்பெரும் தமிழரின் ஐந்தாம் சங்கமே
தீந்தமிழ் அகத்தியர் அடிக ளாரே!

தில்லியில் நிகழ்ந்த திருக்குறள் விழாவில் - ஓர்
சீர்பெரும் விருது பெற்றீர் வாழ்க!
நல்லோர் அளித்த நற்றமிழ் விருது
நானிலம் புகழும் வள்ளுவர் விருது!

நாளைத் திருக்குறள் தேசிய மாகும் அதற்கு
நல்லதோர் அறிகுறி வள்ளுவர் விருது
வாழ்க! வாழ்க! அடிகளார் வாழ்க!
வள்ளுவர் குறள்போல் என்றும் வாழ்க!

உலகத் திருக்குறள் பேரவை நடத்திய மாநில அளவிலான கட்டுரைப்போட்டியில் வெற்றிபெற்ற கல்லூரி மாணவ மாணவியருக்குப் பரிசளிப்பு விழா

உலகத் திருக்குறள் பேரவையின் மாநிலச் செயற்குழுக் கூட்டம்

உலகத் திருக்குறள் பேரவையின் தலைமையகமான குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம் திருமடத்தில் 13.2.2016 சனிக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் உலகத் திருக்குறள் பேரவை நடத்திய மாநில அளவிலான கல்லூரி மாணவ, மாணவியருக்கான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிப்பு விழா நடைபெற்றது. திருக்குறள் திரு.நாவை.சிவம் அவர்கள் திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பாடினார். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் தலைமை வகித்தார். இளைஞர் அணி துணைச்செயலாளர் முனைவர்.திரு. மு.பழனியப்பன் அவர்கள் வரவேற்புரை யாற்றினார். மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் திருமதி. சந்திரா ரவீந்திரன் அவர்கள் போட்டி பற்றிய அறிக்கை படித்தார். விழாத் தலைவர் அவர்கள் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசு, சான்றிதழ், திருக்குறள் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் எழுதிய "திருக்குறள் உரை" நூல் ஆகியன வழங்கிப் பாராட்டியும் கோவை செல்வி. S. ஹரிப்பிரியங்காவுக்கு "திருக்குறள் சாதனையாளர்" விருதும் வழங்கிப் பாராட்டியும் சிறப்பித்தார்கள். இளைஞர் அணிச்செயலாளர் முனைவர்.திரு. சொ.சேதுபதி அவர்கள் தொகுப்புரை வழங்கினார். இளைஞர் அணி துணைச் செயலாளர் முனைவர்.திரு.மு. பழனியப்பன் அவர்கள் நன்றியுரை கூற விழா இனிதே நிறைவேறியது.

பிற்பகல் 3.30 மணியளவில் உலகத் திருக்குறள் பேரவையின் செயற்குழுக் கூட்டம் தலைவர் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பொதுச்செயலாளர் புலவர்.தி.சு. மலையப்பன் அவர்கள் ஆண்டறிக்கை படித்து விளக்கவுரை நிகழ்த்தினார். கட்டுரைப் போட்டி, கிளைகளை வலிமைப்படுத்துதல், மேலும் கிளைகளை விரிவாக்கம் செய்தல் ஆகிய செய்திகள் குறித்துச் செயற்குழு உறுப்பினர்கள் கருத்துரை வழங்கினார். தலைவர் அவர்கள் நிறைவுரை ஆற்றினார். இளைஞர் அணி துணைச்செயலாளர் முனைவர்.திரு. மு. பழனியப்பன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

இப்போது.......... கவிதை

(கவிஞர். இளசை சுந்தரம்)

◆ முல்லைக் கொடிகளை
முறித்துப் போட்டுப்போகும்
பாரிகளின் கார்கள்

◆ மாபெரும் விருந்துகளில்
மயில் கறி கேட்கும்
பேகன்கள்

◆ அவ்வையைக் கண்டதும்
அதிசய நெல்லிக்கனியை
ஒளித்து வைக்கும்
அதியமான்கள்

◆ ஆட்சியைப் பிடிக்க
தம்பியின் தலை கேட்கும்
குமணர்கள்

◆ மணியடித்த பசுவிடம்
பேரம் பேசும்
மனு நீதிச் சோழர்கள்

◆ காரியம் நடக்க
காசு கேட்கும்
காரிகளும் ஓரிகளும்

◆ சமாதான புறாக்களின்
சதைகளை ருசி பார்க்கும்
சிபி ராஜாக்கள்

◆ கவச குண்டலங்களை
டாஸ்மாக் கடைகளில் அடகு வைக்கும்
கர்ண வீரர்கள்

◆ இப்போது
கண்ணன் காண்டீபம் ஏந்தி நிற்க
அர்ஜுனன் கீதை சொல்கிறான்

உலகத் திருக்குறள் பேரவை
காஞ்சிபுரம் மாவட்டம்

9-ஆம் ஆண்டு விழா விருது - பொற்கிழி - பரிசளிப்பு விழா 31.1.206 மாலை 5மணியளவில் சென்னை, தாம்பரம் டி.ஜி.பி. திருமண மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இவ்விழாவில் பேரவையின் மாநிலப் புரவலர் திரு.சோ.மலையரசன் வரவேற்புரையாற்றினார். திரு. விஜய், மா.இராமமூர்த்தி ஆண்டறிக்கை படித்தார். கவிஞர் புதுகை வெற்றிவேலன் விழாத்தலைமை ஏற்றார். டாக்டர்.ஔவை.நடராசன் "திருக்குறள் புகழ்மாமணி விருது" பொற்கிழி வழங்கிச் சிறப்புரையாற்றினார். இவ்விருதும் பொற்கிழியும் பெற்ற தமிழ்நிதி தெ.பொ.இளங்கோவன் ஏற்புரை வழங்கினார். கல்லூரி மாணவர்களுக்கு - கவிதை, கட்டுரைப் போட்டிப் பரிசு வழங்கி முனைவர் வெ. இறையன்பு இ.ஆ.ப., சிறப்புரை வழங்கினார். உயர்நிலை / மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு, திரு.கு.பெரியய்யா இ.கா.ப., கவிதை கட்டுரைப் போட்டிப் பரிசு வழங்கிச் சிறப்புரையாற்றினார். பெரியவர்களுக்குக் கவிதை கட்டுரைப் போட்டிப் பரிசு வழங்கி, மருத்துவர் எம்.ஏ.உசைன் வாழ்த்துரை வழங்கினார். சிறந்த கவிதை, கட்டுரை நூல்களுக்குப் பரிசு வழங்கி புதுகை.மு.தருமராசன் வாழ்த்துரை வழங்கினார். நன்றியுரைக்குப் பின் நாட்டு வாழ்த்துடன் விழா இனிதே நிறைவெய்தியது.

9 ஆம் ஆண்டுவிழா 31.1.2016
பரிசு பெற்றவர்களின் பட்டியல்

கல்லூரி மாணவர்கள்

கட்டுரை

முதல்பரிசு ரூ. 3000/-	**அ. சந்திரலேகா** ஸ்ரீ பாரதி அறிவியல் & கலைக் கல்லூரி, புதுக்கோட்டை
இரண்டாம்பரிசு ரூ. 2000/-	**மு. மாரியம்மாள்** மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை

மூன்றாம்பரிசு ரூ. 1000/-	**சி. ஆர்த்தி பிரசன்னா** ஸ்ரீ பாரதி கலை & அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை

மரபுக் கவிதை

முதல்பரிசு ரூ. 3000/-	**மு. லாவண்யா** ஜெயா கல்லூரி, திருநின்றஊர் திருவள்ளூர் மாவட்டம்
இரண்டாம்பரிசு ரூ. 2000/-	**ந. பார்கவி** ஸ்ரீ பாரதி கலை & அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை
மூன்றாம்பரிசு ரூ. 1000/-	**த. சூரியகுமார்** வி.ஐ.டி. அறிவியல் கல்லூரி, கேளம்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்

புதுக் கவிதை

முதல்பரிசு ரூ. 3000/-	**ஆ.ஜெயராம்** கதிர் பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர்
இரண்டாம்பரிசு ரூ. 2000/-	**சி. நித்தியா,** நீதிபதி பஷீர் அகமது சயிது மகளிர் கல்லூரி, தேனாம்பேட்டை, சென்னை.
மூன்றாம்பரிசு ரூ. 1000/-	**ந. பார்கவி** ஸ்ரீ பாரதி கலை & அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை

உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி மாணவர்கள்

கட்டுரை

முதல்பரிசு ரூ. 3000/-	**மா.வ. விஷ்ணுப்பாண்டியன்** ஆல்வின் மெமோரியல் பள்ளி கிழக்குத் தாம்பரம், காஞ்சிபுரம் மாவட்டம்
இரண்டாம்பரிசு ரூ. 2000/-	**அ.லெ. விமலாதித்தன்** ஏ.டி.ஆர்.மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி கைக்குறிச்சி, புதுக்கோட்டை மாவட்டம்
மூன்றாம்பரிசு ரூ. 1000/-	**பா. வர்ஷிணி** ஸ்ரீகேதன் நிறைநிலைப்பள்ளி, திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம்

மரபுக் கவிதை

முதல்பரிசு ரூ. 3000/- கு. சிவகணபதி,
புனித அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, துவரங்குறிச்சி திருச்சி மாவட்டம்

இரண்டாம்பரிசு ரூ. 2000/- பூ. மணிஷா,
சுகுணா PIP பள்ளி, கோயம்புத்தூர் கோயம்புத்தூர் மாவட்டம்.

மூன்றாம்பரிசு ரூ. 1000/- சு.சி. ரவிசங்கர்
கேந்திர வித்யாலயா கிழக்குத் தாம்பரம், காஞ்சிபுரம் மாவட்டம்

புதுக் கவிதை

முதல்பரிசு ரூ. 3000/- சு. சுபாஷிணி
மவுண்சியா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, புதுக்கோட்டை

இரண்டாம்பரிசு ரூ. 2000/- ச.கா. சாய்கணேஷ்
ஸ்ரீ கேதன் நிறைநிலைப்பள்ளி, திருவள்ளூர்

மூன்றாம்பரிசு ரூ. 1000/- ச. சௌமியா
கற்பக வினாயகா மேல்நிலைப் பள்ளி, புதுக்கோட்டை

பெரியவர்கள்

கட்டுரை

முதல்பரிசு ரூ. 3000/- பொன்னகரம் கவிஞர் எட்சுல்தான்
கொருக்குப்பேட்டை, திருவள்ளூர் மாவட்டம்

இரண்டாம்பரிசு ரூ. 2000/- இராம. இளங்கோவன்
பெங்களூர்

மூன்றாம்பரிசு ரூ. 1000/- மு. ஜெயலெட்சுமி
குரோம்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம்

மரபுக் கவிதை

முதல்பரிசு ரூ. 3000/-	மு.பா. இளங்கவின், பெங்களூர்.
இரண்டாம்பரிசு ரூ. 2000/-	குமரி அமுதன் சாலிக்கிராமம், சென்னை மாவட்டம்
மூன்றாம்பரிசு ரூ. 1000/-	முனைவர். க. தமிழ்மல்லான் புதுச்சேரி

புதுக் கவிதை

முதல்பரிசு ரூ. 3000/-	கவிஞர். கவியரங்கன், மதுராந்தகம், காஞ்சிபுரம் மாவட்டம்
இரண்டாம்பரிசு ரூ. 2000/-	கவிஞர். துரைக்குமரன் மச்சுவாடி, புதுக்கோட்டை
மூன்றாம்பரிசு ரூ. 1000/-	ந.இரா. கிருஷ்ணமூர்த்தி நங்கைநல்லூர், காஞ்சிபுரம் மாவட்டம்

கட்டுரை நூல்கள்

முதல்பரிசு ரூ. 3000/-	முனைவர். நயம்பு அறிவுடைநம்பி போரூர், திருவள்ளூர் மாவட்டம்
இரண்டாம்பரிசு ரூ. 2000/-	இரா. செந்தமிழ்ச்செல்வி தருமபுரி, தருமபுரி மாவட்டம்
மூன்றாம்பரிசு ரூ. 1000/-	துரை தனபாலன் கூடுவான்சேரி, காஞ்சிபுரம் மாவட்டம்

கவிதை நூல்கள்

முதல்பரிசு ரூ. 3000/-	கவிஞர். தமிழ்க்குழவி நாகர்கோயில்
இரண்டாம்பரிசு ரூ. 2000/-	கவிஞர். மானம்பாடி புணியமூர்த்தி, தஞ்சை மாவட்டம்
மூன்றாம்பரிசு ரூ. 1000/-	ஓவியர் கி. ஈஸ்வரன் பல்லடம், கோயம்புத்தூர் மாவட்டம்

"திருக்குறள் புகழ்மணி விருது பொற்கிழி ரூ. 5000/-"

திரு. தெ.பொ.இளங்கோவன்

தலைவர், குரோம்பேட்டை திருக்குறள் பேரவை

திருக்குறள் பேரவை – தூத்துக்குடி

திருக்குறள் நூல் வெளியீட்டு விழா



உலகத் திருக்குறள் பேரவை தூத்துக்குடி கிளையின் மாதாந்திரக் கூட்டம், மாணவர்களுக்கான திருக்குறள் தெளிவுரை நூல் வெளியீட்டு விழா தூத்துக்குடி சி.எம்.மேனிலைப்பள்ளியில் மாவட்ட வருவாய்த்துறை முன்னாள் அலுவலர் (DRO) தலைமையில் மகாலெட்சுமி கல்லூரி தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் குருலெட்சுமி, மாவட்டத் தலைவர் முருகேசன் முன்னிலையில் நடைபெற்றது.

உலகத் திருக்குறள் பேரவையின் மாவட்டச் செயலாளர் திருக்குறள் மோ. அன்பழகன் வரவேற்றுப் பேசினார்.

உரையாசிரியர் வாய்மை எழுதிய மாணவர்களுக்கான எளிய திருக்குறள் தெளிவுரை நூலினை பேரவைத் தலைவர் திருச்சிற்றம்பலம் நூலினை வெளியிட தொழிலதிபர் எட்விட் சாமுவேல் பெற்றுக்கொண்டார்.

ஆசிரியர் சுந்தரி குறள்உரை வழங்கினார், எழுத்தாளர் வ.உ.சி.துறைமுக அலுவலக அலுவலர் நாகராசன் சிறுகதைகள் குறித்து உரையாற்றினார்.

உலகத் திருக்குறள் பேரவையின் மாவட்ட நிர்வாகிகள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆசிரியர் வாய்மை ஏற்புரையில், திருக்குறள் கருத்துகள் புலவர்கள் மத்தியில் மட்டும் பேசப்படாமல் பாமரமக்களும் அறியும் வண்ணம் பரப்புரைச் செய்ய வேண்டும். திருக்குறள் நெறி வழியில் நடந்தால் நாடு முன்னேறும். இன்றைய காலக்கட்டத்தில் திருக்குறள் நெறியே சாலச்சிறந்த நெறி என்றும், திருக்குறள் நடுவண் அரசின் தேசிய நூலாக வேண்டும், தமிழ்மொழி மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக வேண்டும் என்று பேசினார்.

பொற்கிழிக் கவிஞர் சவகர்லால் நன்றி கூறினார்.

விழவில் குமரிக்கண்ணன், ஆசிரியர் தேவிகா, கவிஞர் செல்வராமன், அறிவு செல்வம், இரா. அண்ணாமலை, இன்பவாணன், தனபால், செய்யது முகமது செரீப் மற்றும் பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மொழியையும், சமயத்தையும் தூக்கிப் பிடிக்கின்ற மொழியாக தமிழ்மொழி உள்ளது. விடுதலைப் போராட்டக் காலத்தில் மக்களை விழித்தெழச் செய்ய தமிழின் அத்தனை எழுத்துக்களையும் ஆயுத எழுத்துக்களாக வெள்ளையர்களுக்கு எதிராக வீசினான் பாரதி. பாரதி காலத்தில் நாட்டு விடுதலைக்கு தன்னை அர்ப்பணித்த மொழியாக தமிழ் மாறியது. பாரதிதாசன் காலத்தில் தமிழ்வழிக் கல்வியாக வேண்டும் என்ற நிலைக்கு தமிழ் வந்தது.

மன்னர்கள் அரண்மனையில் இருந்த தமிழ் மொழி கடைக்கோடி மனிதனையும் சென்றடைய, கம்பன் தமிழை உயர்த்திப் பிடித்தான். எந்தக் காலத்திலும் யாரும் உள்வாங்கிக்கொள்கின்ற அற்புதமான இலக்கியமாக ராம காவியத்தை கம்பன் உருவாக்கினான். மனிதனுக்கு பொறிகள் அனைத்தும் பக்குவப்படும் வகையில் வாழ்க்கைப் பயணம் இருக்க வேண்டும். ராம காவியம் மனிதனை பக்குவப்பட வைக்கின்ற பணியைத் தான் செய்கிறது.

லட்சிய வாழ்க்கை என்பது வேறு. லட்சங்களில் வாழ்க்கை என்பது வேறு. லட்சிய வாழ்க்கை இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்வது. அப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்ததால் தான் ராமன் அரண்மனையைத் துறந்து வனவாசம் சென்றான். சமூக வாழ்க்கைக்கும், தனி மனித வாழ்க்கைக்கும் கம்பனின் ராம காவியம் அனைத்து நிலைப் பாடுகளையும் அளிக்கிறது.

- தவத்திரு பொன்னம்பல அடிகளார்

காரைக்குடி கம்பன் திருநாள் நிறைவரங்க தலைமை உரையில்....

சிந்தனை வட்டம்

மக்கள் சிந்தனை புதிய இதழ் கிடைத்தது. முற்றும் படித்துப் பார்த்தேன். மிகப் பயனுள்ள கருத்துரைகள். குறிப்பாக, தித்திக்கும் பொங்கல் திருநாள் எனும் தலைப்பில் தாங்கள் எழுதியுள்ள தலையங்கம் மிக மிகப் பயனுள்ளது. அப்படியே ஆகட்டும் என்றார் இறைவன் என்ற கதை அருமை. வாழ்க்கை என்பது புரிதலில்தான் இருக்கின்றது என்ற தொடர் மிக மிக உண்மையான தொடர். அனைவரும் உணரவேண்டிய தொடர். மழையின் அருமையை மிக அருமையாகக் குறித்துள்ளீர்கள். மண்ணை மதிக்கவேண்டும், உழைப்பைப் போற்றவேண்டும் என்ற தங்கள் தலையங்கக் கருத்து மிக மிக சரியானது.

என் பணிவார்ந்த பாராட்டுகள்.

தில்லியில் நடந்த திருக்குறள் விழாவில் தாங்கள் பரிசளித்துப் பாராட்டப் பெற்றது மிக மகிழ்ச்சிக்குரியது. ஆன்மாவுடன் ஆன்மா பேசுவதாக இருக்கவேண்டும் என்ற பெரிய அடிகளாரின் கருத்துக்கள் எத்துணை சாத்தியமானவை.

மீண்டும் மிகக் கவனமாக ஆழமாக மக்கள் சிந்தனை இதழை உருவாக்கிய தங்கள் உழைப்புக்குப பாராட்டு.

- க.ப. அறவாணன்

தவத்திரு அடிகளாரின் திருவடிகட்கு பணிவான வணக்கம். தங்கள் கதை மக்கள் சிந்தனையில் வந்ததே அது அருமை. கணவன் மனைவி - வங்கி - பணம் புரிதலில் இருக்கும் வாழ்க்கைக் கதை மிகவும் நன்றாக இருக்கிறது. எங்கும் கேட்காத - பத்திரிகையில் நான் உணர்ந்த வரையில் படிக்காத கதைகள்! புதிதுபுதிதான கதைகளைச் சொல்லும் ஆற்றல் தங்களுக்கு இருக்கிறது. பொதுமக்கள் யாவரும் பாராட்டுகின்றனர் தங்களை.

- தாயம்மாள் அறவாணன்

1. பாவலர் மணி அண்ணன் ஆ.பழநி அவர்களின் "ஒத்தாங்கு ஒறுப்பது" என்ற கட்டுரை ஆய்வில், அவர்களைப் பைந்தமிழ்ப்பா ஆய்வுமணி எனப் போற்றத் தோன்றுகிறது. இதுதான் நுண்மாண்நுழைபுலம் என்பதற்கோர் எடுத்துக்காட்டு.

2. தருமையாதீனப் புலவர் த. குருசாமி அவர்களின் திருநணா - விச்சிலை பற்றிய கட்டுரை ஆய்வும் சிறப்பாக இருந்தது. அவற்றை ஒருமருங்கு ஏற்றும் ஒருமருங்கு ஏலாததுமாக உள்ளதைக் குறிப்பிட விழைகிறேன்.

நன்றா என்பது நணா ஆனது - சரியே. ஆன்பொருநை என்ற ஆறு பெண்பாற்பெயராய் நணா ஆயிற்றென்பதும் அதுவே மலைக்கான பெயருமாயிற்றென்பதும் சரியே!

ஆனால் விச்சிமலை பற்றியகருத்து மாறுபட்டதாக உள்ளது.

கபிலர் கூற்றுப்படி விச்சுக்கோ சேரநாட்டின் மலையரசன் என்பது சரி.

சுந்தரர் திருவையாற்றில் பாடும் விச்சிமலைச்சாரல் என்றது அருணையார் கூறும் "விச்சிய" என்றதில் ஈறு தொகுத்தல் என்பதும் விதைத்தல் என்ற கருத்தும் பொருத்தமாய்த் தெரிகிறது.

தினை விதைக்கப்பட்ட மலைச்சாரலில் மரப்பட்டை, இலை முதலியவற்றை அடித்துக்கொண்டும் விலங்குகளை அடித்துக்கொண்டும், தினைப்புனக் காவலில் உள்ள பெண் சூடிய மாலையை அடித்துக் கொண்டும் ஓடிவரும் காவிரிபாயும் ஐயாறு என்பதே பொருத்தமான கருத்து.

எனவே சேர விச்சி மலைக்கும் கொங்கு மலைக்கும் தொடர்பில்லை என்பதாம்.

- தெ. முருகசாமி

"மக்கள் சிந்தனை" இதழில் "குழந்தை உள்ளமே இறைமையின் இல்லம்" என்ற தலைப்பில் அருளியவை அனைத்தும் அருமையும் பெருமையும் மிக்கது. காந்தியடிகள் கண்ட மூன்று குரங்கு பொம்மைகள் போன்று தாங்களும் பஞ்சு, களிமண், சர்க்கரை பொம்மைகள் வாயிலாகக் குறித்த கருத்துக்கள் நெஞ்சில் நிறுத்த வேண்டியவை. அக்பர்-தான்சேன், டோங்கோவாலா-குதிரைவண்டிக்காரர் வாயிலாகவும் கூறிய கருத்துக்கள் அனைத்தும் சிறப்பானவை; ஆனால் எத்தனை பேர் இவ்வழி நல்வழியென ஏற்று நடப்பார்களோ?

<u>35. துறவு</u>

"யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

- மா. கந்தசாமி

மக்கள் சிந்தனை 10-11ஆவது இதழில் வெளிவந்த "குழந்தை உள்ளமே, இறைமையின் இல்லம்" என்ற சந்நிதானம் எழுதி நேருபெருமானின் எண்ணத்தைக் கொண்டு முத்தாய்ப்பாய் முடித்த செய்திகள் நாடுபோற்றும் நற்செய்தியாகும்.

சாத்திரமும் தோத்திரமும் கொண்டு விளக்கும் செய்திகளைப் புறந்தள்ளி சம்பவங்களை எடுத்து எழுதும் திருக்கரம் வாழ்க!

சாத்திரம் படிப்பது அந்தக் காலம்! சம்பவம் படிப்பது இந்தக் காலம் என்று எண்ணினேன். அருள்நெறித் தந்தை பற்றி திருசிவாஜிப் பெரியவர் பன்முகத்திறன் கொண்டவர் என்று அடையாளம் காட்டியது பாராட்டத்தக்கது. ஆதீனப்புலவர் கவிஞர் பரமகுரு இளங்கோவடிகள் கவிதைபோல், "நற்றாளை ஏத்தாத நாள் என்ன நாளே" என்ற பாடலில் பத்திமை உணர்வு பொங்கித் ததும்பி வழிகிறது. அப்பாடலை தேவாரப் பாடசாலை மாணவர் பலர்க்கு இசைகூட்டி அரங்கில் பாடவைத்துள்ளேன். திரு. சேதுபதியின் பட்டிமன்றம் சுவை மிக்கது. தமிழாகரர் சிலம்பு பற்றியது ஆழ்ந்த நுண்ணுணர்வு மிக்க ஆய்வுக் கட்டுரை. படிக்க படிக்க நயம் தருகிறது.

– தா. குருசாமி தேசிகர்

மக்கள் சிந்தனை

உரிமை – பதிப்பு அறிக்கை

1.	இதழின் பெயர்	:	மக்கள் சிந்தனை
2.	மொழி	:	தமிழ்
3.	வெளியீடு	:	திங்கள் இதழ்
4.	வெளியீடு இடம்	:	குன்றக்குடி – 630 20[illegible]
5.	ஆசிரியர்	:	மரு. பரமகுரு
	உரிமை	:	திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி
6.	பதிப்பாளர்	:	பழ. பாண்டித்துரை
	அச்சகம்	:	சண்முகநாதன் அச்சகம், மேலரதவீதி, குன்றக்குடி.
7.	பதிவு	:	செய்தி இதழ்

மேற்கண்ட விவரம் யாவும் உண்மை என்றும், நம்பத் தகுந்தவை என்றும் உறுதி கூறுகிறேன்.

நாள் : 1.4.2015 மரு. பரமகுரு

2. தருமையாதீனப் புலவர் த. குருசாமி அவர்களின் திருநணா - விச்சிலை பற்றிய கட்டுரை ஆய்வும் சிறப்பாக இருந்தது. அவற்றை ஒருமருங்கு ஏற்றும் ஒருமருங்கு ஏலாததுமாக உள்ளதைக் குறிப்பிட விழைகிறேன்.

நன்றா என்பது நணா ஆனது - சரியே. ஆன்பொருநை என்ற ஆறு பெண்பாற்பெயராய் நணா ஆயிற்றென்பதும் அதுவே மலைக்கான பெயருமாயிற்றென்பதும் சரியே!

ஆனால் விச்சிமலை பற்றியகருத்து மாறுபட்டதாக உள்ளது.

கபிலர் கூற்றுப்படி விச்சுக்கோ சேரநாட்டின் மலையரசன் என்பது சரி.

சுந்தரர் திருவையாற்றில் பாடும் விச்சிமலைச்சாரல் என்றது அருணையார் கூறும் "விச்சிய" என்றதில் ஈறு தொகுத்தல் என்பதும் விதைத்தல் என்ற கருத்தும் பொருத்தமாய்த் தெரிகிறது.

தினை விதைக்கப்பட்ட மலைச்சாரலில் மரப்பட்டை, இலை முதலியவற்றை அடித்துக்கொண்டும் விலங்குகளை அடித்துக்கொண்டும், தினைப்புனக் காவலில் உள்ள பெண் சூடிய மாலையை அடித்துக் கொண்டும் ஓடிவரும் காவிரிபாயும் ஐயாறு என்பதே பொருத்தமான கருத்து.

எனவே சேர விச்சி மலைக்கும் கொங்கு மலைக்கும் தொடர்பில்லை என்பதாம்.

- தெ. முருகசாமி

"மக்கள் சிந்தனை" இதழில் "குழந்தை உள்ளமே இறைமையின் இல்லம்" என்ற தலைப்பில் அருளியவை அனைத்தும் அருமையும் பெருமையும் மிக்கது. காந்தியடிகள் கண்ட மூன்று குரங்கு பொம்மைகள் போன்று தாங்களும் பஞ்சு, களிமண், சர்க்கரை பொம்மைகள் வாயிலாகக் குறித்த கருத்துக்கள் நெஞ்சில் நிறுத்த வேண்டியவை. அக்பர்-தான்சேன், டோங்கோவாலா-குதிரைவண்டிக்காரர் வாயிலாகவும் கூறிய கருத்துக்கள் அனைத்தும் சிறப்பானவை; ஆனால் எத்தனை பேர் இவ்வழி நல்வழியென ஏற்று நடப்பார்களோ?

<u>35. துறவு</u>

"யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

- மா. கந்தசாமி

மக்கள் சிந்தனை 10-11ஆவது இதழில் வெளிவந்த "குழந்தை உள்ளமே, இறைமையின் இல்லம்" என்ற சந்நிதானம் எழுதி நேருபெருமானின் எண்ணத்தைக் கொண்டு முத்தாய்ப்பாய் முடித்த செய்திகள் நாடுபோற்றும் நற்செய்தியாகும்.

சாத்திரமும் தோத்திரமும் கொண்டு விளக்கும் செய்திகளைப் புறந்தள்ளி சம்பவங்களை எடுத்து எழுதும் திருக்கரம் வாழ்க!

சாத்திரம் படிப்பது அந்தக் காலம்! சம்பவம் படிப்பது இந்தக் காலம் என்று எண்ணினேன். அருள்நெறித் தந்தை பற்றி திருசிவாஜிப் பெரியவர் பன்முகத்திறன் கொண்டவர் என்று அடையாளம் காட்டியது பாராட்டத்தக்கது. ஆதீனப்புலவர் கவிஞர் பரமகுரு இளங்கோவடிகள் கவிதைபோல், "நற்றாளை ஏத்தாத நாள் என்ன நாளே" என்ற பாடலில் பத்திமை உணர்வு பொங்கித் ததும்பி வழிகிறது. அப்பாடலை தேவாரப் பாடசாலை மாணவர் பலர்க்கு இசைகூட்டி அரங்கில் பாடவைத்துள்ளேன். திரு. சேதுபதியின் பட்டிமன்றம் சுவை மிக்கது. தமிழாகரர் சிலம்பு பற்றியது ஆழ்ந்த நுண்ணுணர்வு மிக்க ஆய்வுக் கட்டுரை. படிக்க படிக்க நயம் தருகிறது.

– தா. குருசாமி தேசிகர்

மக்கள் சிந்தனை

உரிமை – பதிப்பு அறிக்கை

1.	இதழின் பெயர்	:	மக்கள் சிந்தனை
2.	மொழி	:	தமிழ்
3.	வெளியீடு	:	திங்கள் இதழ்
4.	வெளியீடு இடம்	:	குன்றக்குடி – 630 20?
5.	ஆசிரியர்	:	மரு. பரமகுரு
	உரிமை	:	திருவண்ணாமலை ஆதீனம்,குன்றக்குடி
6.	பதிப்பாளர்	:	பழ. பாண்டித்துரை
	அச்சகம்	:	சண்முகநாதன் அச்சகம், மேலரதவீதி, குன்றக்குடி.
7.	பதிவு	:	செய்தி இதழ்

மேற்கண்ட விவரம் யாவும் உண்மை என்றும், நம்பத் தகுந்தவை என்றும் உறுதி கூறுகிறேன்.

நாள் : 1.4.2015

மரு. பரமகுரு



பேராசிரியர் இரா. செல்வக்கணபதி மறைவு

பேராசிரியர் இரா. செல்வக்கணபதி 2.3.2016 அன்று சென்னையில் காலமானார். தருமை ஆதீனக் கல்லூரியில் தமிழ் பயின்று அக்கல்லூரியிலேயே பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் பணியாற்றியவர். இவர் நாடறிந்த சொற்பொழிவாளராகத் திகழ்ந்தவர். தமிழ் நாட்டிலும், வெளி மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும், சொற்பொழிவாற்றிப் புகழ் பெற்றவர். வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் தொடர்ந்து பலகாலம் சைவசமய சொற்பொழிவாற்றிய தகையாளர், நூல் பல எழுதியவர். இப்பெருமகனார் பல்லாண்டுகாலம் உழைத்து “சைவ சமய களஞ்சியம்” பத்து தொகுதிகளை வெளியிட்டு, முத்திரை பதித்தவர். நமது ஆதீனத்தின் தமிழாகரர் பட்டம் பெற்றவர். சைவமும் தமிழும் இருவிழிகளாகக் கொண்டு பணிசெய்த இந்த அறிஞரின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இப்பெருமகனாரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் இவர்தம் குடும்பத்தினருக்கு “மக்கள் சிந்தனை” ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறது; சிறந்த சிவநேசச் செல்வராக விளங்கிய இவர்தம் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதிபெற இறைஞ்சுகிறது.

– ஆசிரியர்

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது
பழநி
பரிமள விலாஸ்
S.சித்தநாதன்

ஜவ்வாது வாசனை விபூதி
&
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்
வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தனாதன் சன்ஸ்
அடிவாரம், பழநி - 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406

மக்கள் கல்வி நிலையம்

(மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)

குன்றக்குடி - 630 206

Phone: 04577 - 264567 Mobile : 94433 64200

குன்றக்குடி மக்கள் கல்வி நிலையம், கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு கீழ்க்கண்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கிவருகிறது. பயிற்சி நிறைவு பெற்றபின் சான்றிதழ்களும், தொழில் துவங்க ஆலோசனைகளும் வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இயக்குநர்

மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி

பயிற்சிகள் (TRADES)

1. தையல் பயிற்சி, 2. அழகுக்கலை, 3.லெதர் & ரெக்ஸின் பொருட்கள் தயாரித்தல், 4. பற்றவைப்பு (ஆர்க் & கேஸ் வெல்டிங்), 5.செல்போன் பழுது நீக்குதல், 6. T.V, Radio- பழுது நீக்குதல், 7. எம்ப்ராய்டரி 8. பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல், 9.வீட்டு வயரிங் வேலை செய்தல், 10. இரண்டு சக்கர வாகனம்பழுது நீக்குதல், 11. ஆபரண நகை தயாரித்தல், 12. திரை அச்சு வேலை, 13. சேலை டிசைனிங், 14. கைவினைப் பொருட்கள் தயாரித்தல், 15.பொம்மைகள் தயாரித்தல், 16. காகித உறை மற்றும் பைகள் தயாரித்தல், 17. வீட்டு உபயோகப்பொருட்கள் பழுது நீக்குதல், 18. உணவுப் பொருட்கள் தயாரித்தல், 19. பேப்ரிக் பெயிண்டிங், 20. சாக்பீஸ், மெழுகுவர்த்தி, பினாயில், சாம்பிராணி தயாரித்தல் 21. கயிறு திரித்தல், 22. GFRB பொருட்கள் தயாரிப்பு, 23. சேலை புதுப்பித்தல் சுருக்கம் நீக்குதல், 24. எலக்ட்ரானிக் சோக் தயாரித்தல், 25. கூடை முடைதல், 26.உல்லன் நிட்டிங் 27. நாப்கின் தயாரித்தல், 28. தையல் இயந்திரம் பழுது நீக்குதல், 29. போட்டோ லேமினேசன், 30. ஐஸ்கிரீம் தயாரித்தல் 31. காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல்,

தகுதி	:	தன்முனைப்பு, தன் ஆர்வம் மட்டும்.
பயிற்சி நேரம்	:	பயிற்சி நாள்தோறும் இரண்டு மணி நேரம் மட்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளில் சேரலாம்.
குறிப்பு	:	ஒவ்வொரு பயிற்சிக்கும் பயிற்சி நிறைவு பெற்றபின் தேர்வின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-Feb-Apr 2016

Price Rs. 8-00
Date of Publication 10-04-2016

பெறுநர்

திரு திருவருள்திரு சுவாமிகள் அவர்கள்,
கோவிலூர் ஆதீனம்,
கோவிலூர்,
மானகிரி-(அஞ்சல்),
காரைக்குடி-(வழி), அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி ✆ : 264166